
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 13 தொகுதி 4 அக்டோபர் - டிசம்பர் 2023


**R 5512**

## கேள்விகள் நிறைந்த நாள்
## A DAY OF QUESTIONS

**ஆதார வசனங்கள் : மத்தேயு 22 : 15–22**

**“இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்” – மத்தேயு 22:21.**

இந்தப் பாடம், பொல்லாத திராட்சைத்தோட்டக்காரர்கள் மற்றும் ஆயத்தமில்லாத விருந்தாளிகள், இயேசுவால் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீகத் திட்டத்தின் அழகிற்கு தங்களை உண்மையில் குருடாக்கச் செய்கிறதாகிய தங்களுடைய சொந்த முறைகள் மற்றும் கோட்பாடுகளினால் மிகவும் வசீகரிக்கப்பட்டிருந்ததை நமக்குக் காண்பிக்கிறது. இதைக் குறித்து நாம் ஊகிக்கவில்லை. பரி.பேதுரு, பெந்தெகொஸ்தே நாளின் விசாரணையாளர்களுக்கு விளக்குகையில், “சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினால் இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்” (கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததை) என்று கூறுகிறார்(அப் 3 :17). “அறிந்திருந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே ” என்று பரி.பவுல் அறிவித்தார்(1கொரி2:8). சுயசித்தத்தாலும், தேவனுடையதல்லாத திட்டங்கள் மற்றும் திட்டம் வகுத்தல்களாலும் வளர்க்கப்பட்ட தவறு, எப்போதும் ஒரு குருட்டுத்தனத்தின் விளைவையே உடையதாயிருக்கிறது. அதினால், தேவனுடைய உண்மையான செய்தி அவர்களை சென்றடையும்போது, “அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்” என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

கிறிஸ்தவர்களும்கூட, பரிசுத்தஆவியினால் நிரப்பப்படாதிருந்து, தப்பறையினாலோ அல்லது சுயநலத்தினாலோ ஆதிக்கம் செலுத்தப்படுவதற்கு ஏற்ற விகிதத்தில், குருடாக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லாப் புத்திக்கும் மேலான தேவனுடைய அன்பின் நீள, அகல, உயர, ஆழத்தை சிலர் அதிகமாகவும், சிலர் குறைவாகவும் காண்கிறார்கள். நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் பரந்து அகன்றதாக திறக்க நமக்காக பரி.பவுல் ஜெபித்ததில் எந்த ஆச்சரியமுமில்லை! – எபேசியர் 1 :18.

இயேசுவின் போதனைகள் பெருந்திரளான ஜனங்களிடத்தில் செல்வாக்கு செலுத்துகிறதை உணர்ந்து, தங்கள் சொந்த போதனைகளின் முரண்பாடுகளை அறிந்த உலக ஞானிகளாகிய(ஆவிக்குரிய குருடர்களான) பரிசேயர்களும் சதுசேயர்களும், இயேசுவின் போதனைகள் முரணாக இருப்பதாக தங்களால் காண்பிக்கமுடியும் என்று நினைத்தனர். இந்த நோக்கத்திற்காக, கேள்விகளைக் கேட்பதற்கும், இயேசுவை சிக்கவைக்க நாடுவதற்கும், ஜனங்களிடத்தில் அவர் ஊக்கமூட்டிய நம்பிக்கைகளின் முரண்பாட்டைக் காண்பிப்பதற்கும், இவ்விதமாக ஜனக்கூட்டத்தில் அவரை அவமதிக்கவும், அவர்கள் தங்கள் சீடர்கள் சிலரை ஜனக்கூட்டத்தின் மத்தியில் அனுப்பினர். இவற்றில் முதலாவதாக, அரசாங்கத்திற்கு அவர் நேர்மையில்லாதவர் என்று நிரூபிக்கும்படியாகவும், இராயனின் வரிவிதிப்பு சட்டத்திற்கு எதிராக போதிக்கிற, தேசதுரோக நபராக அவர் கைது செய்யப்பட வழிநடத்தவும், அவர் எதையாகிலும் சொல்லுவதில் அவரை சிக்கவைக்க நாடினர். மற்றொரு புறத்தில், இராயனுடைய சட்டத்தைக் குறித்து அவர் வாதிட்டாரானால், இதனால் பொதுமக்களின் உணர்வுக்கு அவர் விரோதமாயிருப்பார் என்றும் அவர்கள் நினைத்தனர்.

இயேசு பரத்திலிருந்து வருகிற ஞானத்தை உடையவராயிருந்தார். “இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ” என்ற அவர்களின் கேள்விக்கு பதில் கூறுகிறதில், வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார். அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டுவந்தனர். அப்போது அவர் : இந்த சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர் :

## இம்மாத வெளியீட்டில்


.. **கேள்விகள் நிறைந்த நாள்** .... 1
.. **தற்கால நெருக்கடி நேரம்** .... 4
.. ***சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட ஜனம்*** .... 7
.. ***தீமை பேசுதல் என்றால் என்ன ?*** .... 11
.. ***ஒருவனும் உன் கிரீடத்தை எடுக்காதிருக்கட்டும்*** .... 15



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

அப்படியானால் இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்! அப்படியொரு பதிலில் அவர்கள் வியப்படைந்து, அவரை விட்டுச் சென்றதில் ஆச்சரியமில்லை. உண்மையாகவே, “அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை”

**இராயனுடையவைகள்**

எஜமான் அந்த கேள்வியை சாதுர்யமாக தவிர்க்க மாத்திரம் செய்தார் என்று நாம் சொல்லமுடியாது. மிகவும் மோசமான சில மனிதர்கள் கேள்விகளை தட்டிக்கழிக்கவும் அல்லது தவிர்க்கவும், கேள்விகேட்பவரின் செலவில் சிரிக்கவும் இயலுபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்த விஷயத்தில் அந்த பதில் முழுமையானதாக இருந்தது. அதாவது, சத்தியமாக, முழுவதும் உண்மையாக, வார்த்தையில் ஒவ்வொரு அர்த்தத்திலும் எஜமானரின் எல்லா போதனைகளுடன், முழு இசைவில் இருந்தது. அவருடைய சீஷர்கள் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்கிறவர்களாக, சண்டை செய்கிறவர்களாக, குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாக இருக்க போதிக்கப்படவில்லை. மாறாக, நன்றியுள்ளவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக, சந்தோஷமுள்ளவர்களாக, “அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாக” ஜீவிக்கவே கற்பிக்கப்பட்டனர். தற்போதைய இராஜ்ஜியங்களின் அதிகாரங்கள், வெறுமனே மனிதர்களால் அல்ல, தேவனால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பூமிக்குரிய இராஜ்ஜியங்கள் சில சமயங்களில் உரிமைகோருவதைப்போல, உண்மையில் அவை தேவனுடைய இராஜ்ஜியங்கள் அல்ல என்பது உண்மையே. உண்மையில் அவைகள் அடிக்கடி பேரரசுகளையும் அதிகாரங்களையும் கைப்பற்றுகின்றன என்பது உண்மையே. உண்மையில் அவைகள் சிலசமயம் பாவம், அநீதி, அக்கிரமம் ஆகியவற்றை வளர்க்கின்றன. மேலும் அவை பெருமளவில், வெளிப்புறத்தோற்றத்தில் மனித சூழ்ச்சி மற்றும் பொல்லாப்பின் விளைவாக இருக்கின்றன என்பதும் உண்மையே. இருந்தபோதிலும், யேகோவா தேவன் மாபெரும் கர்த்தாதி கர்த்தாவாக இருக்கிறார் என்பதை தேவனுடைய ஜனங்கள் உணர்ந்திருக்கிறார்கள். மேலும், பாவமுள்ள மனிதர்களின் கைகளில், பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை அனுமதிப்பது, இந்த தற்காலத்துக்கான அவரது திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது என்றாலும், இன்னமும் இந்த இராஜ்ஜியங்களை அவர் நியமிக்கிறார், அங்கீகரிக்கிறார், அல்லது அனுமதிக்கிறார் என்ற அறிக்கையை நியாயப்படுத்துவதைப்போல, ஒருவரைத் தடுக்கவோ அல்லது மற்றொரு ஆட்சியாளரை முன்னெடுத்துச் செல்வதினிமித்தமாகவோ, அவர் இன்னும் அப்படிப்பட்ட ஒரு மேற்பார்வையை செயல்முறைப்படுத்துகிறார் என்பதை தேவனுடைய ஜனங்கள் உணர்ந்திருக்கவேண்டும். எனவே, பரலோகத் தகப்பன் எதை அங்கீகரித்தாலும் அல்லது அனுமதித்தாலும், அதை அவருடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளில் ஒருவரும் எதிர்க்கவோ அல்லது மாற்றவோ அல்லது கவிழ்க்கவோ ஒருகணம் கூட சிந்திக்கக்கூடாது.

தேவன் உயர்த்துகிறார், தாழ்த்தவும் செய்கிறார் என்று வேத வசனங்கள் அறிவிக்கின்றன. கோபம், வெறுப்பு, வன்மம், சண்டை ஆகியவற்றின் ஆவியால் நிரப்பப்பட்டவர்கள், சந்தர்ப்பம் வரும்போதெல்லாம், தங்கள் வல்லமையை பயிற்சி செய்யவும், தங்கள் சொந்த சுயநல விருப்பங்களை முன்னெடுத்துச்செல்லவும் தயாராக இருக்கிற எண்ணற்றவர்களை அகற்றுவது அவரிடம் இருக்கிறது என்று வேதவசனம் அறிவிக்கிறது. எனவே பூமியின் மீதான ஆளுகை மற்றும் ஏற்பாடுகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த கர்த்தர் விரும்பும்போதெல்லாம், அவருடைய ஏற்பாட்டின் தடுக்கும் கரத்தை அகற்றுவது மட்டுமே அவருக்கு தேவைப்படுகிறது, உடனே தீய செல்வாக்கு அந்த மாற்றத்தை ஏற்படுத்த வேலைசெய்யும். தேவனுடைய ஜனங்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அனைவரும் சமாதானம் பண்ணுகிறவர்களாக, நீதியை ஆதரிப்பவர்களாக, எல்லா மனிதர்களுடனும் சமாதானமாக வாழ்கிறவர்களாகவும் இருக்க, “மேலான அதிகாரங்களுக்கு” முற்றிலும் கீழ்ப்படுத்துவோராக இருந்து, அவைகளை தெய்வீக நியமனமாகவும் அனுமதியாகவும் அங்கீகரிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இராயன் தலைமையாக இருந்த ரோமப்பேரரசின் விஷயத்தில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தானியேலின் தீர்க்கதரிசனத்தின் மூலமாக, அதன் எழுப்புதல் உலகளாவிய ஆட்சியுரிமையாக இருக்கும் என தேவன் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்ததை நாம் கவனிக்கிறோம். எனவே, அந்த ரோம அதிகாரத்தின் பிரதிநிதிகளுக்கு எதிராகப் பேசுவது இயேசுவுக்கோ அல்லது அவருடைய எந்த ஒரு சீஷருக்கோ உரியது அல்ல. ரோம் அரசாளுமானால், ரோம் ஆதரிக்கப்பட வேண்டியது தேவையாயிருந்தது; அந்த ஆதரவளித்தலானது, வரிசெலுத்துவதன் வழிமுறை மூலமாக, முறையாக போதுமானதாக இருந்தது. அப்படியானால், “இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகள் எவ்வளவு நீதியாயிருக்கிறது. வரி செலுத்த அவர்களிடம் பணம் இல்லாதபோது, பரி.பேதுருவிடம் அறிவுறுத்தி, ஒரு மீனைப் பிடித்து அதன் வாயிலிருந்த வெள்ளிப் பணத்தை எடுத்து, தனக்காகவும் இயேசுவுக்குமான வரியை செலுத்த அறிவுறுத்தியதில், எஜமானர் தாமே வரிசெலுத்தியதை நாம் நினைவுகூறுகிறோம்(மத் 17 : 27).

**தேவனுடையதை அவருக்கு செலுத்துங்கள்**

கேள்வி கேட்டவர்கள் தேவனுக்கு செலுத்தவேண்டிய தங்கள் கடமைகளை அவருக்குச் செலுத்துவதன் மீது நோக்கங்கொண்டவர்களாக இருந்திருந்தால், மிகவும் வித்தியாசமான மன கட்டமைப்பை உடையவர்களாக இருந்து, இயேசுவை அவருடைய வார்த்தைகளில் அகப்படும்படிக்கு அல்லது சிக்கவைக்கும்படிக்குத் தேடாமல், அதற்கு மாறாக, அவருடைய சீஷர்களாக இருப்பதற்கு சந்தோஷமடைவோராக இருந்திருப்பார்கள். அப்படியானால், தேவனுக்குரியவை எவை?

நாம் அவருக்கு என்ன கடமைப்பட்டிருக்கிறோம்? அவருடைய சிருஷ்டிகளாக நாம் அவருடையவர்களாக இருக்கிறோம் என்று பதில் கூறுகிறோம். நாம் உடைமையாகப் பெற்றுள்ள ஒவ்வொரு தாலந்தும் ஆற்றலும், நீதியின் உரிமையினால் நம்முடைய சிருஷ்டிகரின் ஊழியத்திலும், அவருக்கு துதி செலுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படவேண்டும்.

இயல்பாகவே சுபாவப்படி நாம் பாவிகளாக இருந்தோம் என்பதையும், தேவனுடைய இரக்கம் கிறிஸ்துவின் மூலம் ஒரு மீட்பை வழங்கியிருக்கிறது என்பதையும் கூடுதலாக உணர்ந்தவர்கள், தங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக, நம் புத்தியுள்ள ஆராதனையை சந்தோஷத்தோடு ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவனுடைய நன்மையை நாம் உணரும்போது, அந்த நன்மை, ஆதாமினால் இழந்த எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கிறதன் சிலாக்கியத்துடன், முழு உலகத்தையும் ஆசீர்வதிக்க நோக்கங்கொண்டிருந்து கல்வாரியில் மீட்டெடுத்தார் என்ற இந்த தேவனுடைய நன்மையை நாம் உணரும்பொழுது, இந்த புத்தியுள்ள ஆராதனை வலியுறுத்தப்பட்டது. இந்த சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது, இயேசுவின் பின்னடியார்கள் அவருடைய மேசியாவின் இராஜ்ஜியத்தில் அவருடன் இணைந்து செயல்படுகிறவர்களாக இருக்க அனுமதிக்கிற கண்ணோட்டத்துடன் இருக்கிறது என்பதை கற்றுக் கொள்ளும்போது, நாம் பயபக்தியினாலும், அதேபோல் ஆச்சரியத்தினாலும் நிரப்பப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பரமஅழைப்பின், அப்படிப்பட்ட சுபாவ மாற்றத்தின் கனம், மகிமை மற்றும் சாவாமையை அடைகிறதன் சாத்தியங்களை உணர்ந்து, நாம் நம்முடைய குறைவானதையெல்லாம் தேவனுக்குக் கொடுக்கவேண்டும். இயேசுவின் பலியின் புண்ணியத்தின் மூலமாக தகுதியடைந்திருக்கிறோமே தவிர, இது தெய்வீக அங்கீகாரத்துக்கு தகுதியற்றதாக இருக்கிறது என்பதை உணரவேண்டும். பிரியமானவருக்குள்ளாக மாத்திரமே நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்.

மேற்கூறிய எல்லாவற்றுடனான முழு இசைவில், தேவனுடையவைகளை சீசருக்குக் கொடுக்கக்கூடாது என்பதே கருத்தாயிருக்கிறது. இங்கு தேவ ஜனங்கள் அநேகருக்கு கண்ணியானது வைக்கப்பட்டுள்ளது. உலகத்துடனான நட்புறவை, சத்தியத்தை தியாகம் செய்வதனால் வரும் விலையில் மாத்திரமே வாங்கமுடியும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்", "இருள் ஒளியைப் பகைக்கும்" போன்ற வேத வசன வார்த்தைகளின் சத்தியத்தில் அவர்கள் பெருமளவு நம்பிக்கை கொள்ளவேண்டும். சீசருடையதை சீசருக்கும்,"யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளையும்" செலுத்தினாலும் அவர்களுடைய தரநிலையானது, உலகத்தினுடையதிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருக்கிறது, எல்லாவற்றினுடைய அவர்களின் கண்ணோட்டமும் மிகவும் வேறுபட்டதாயிருக்கிறது. அதாவது, அது ஒரு விரோதத்தை, நலன்களில் மோதலை வளர்க்கிறது.

எனவே இயேசு கூறுகிறார், "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது(யோவா15 :18,19). "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை " என்ற அப்.யோவானின் வார்த்தைகளின் வலிமையை அவர்கள் தங்கள் மீது பெருமளவில் பதியச்செய்துள்ளனர்.

உலகத்தின் தரநிலைகள், வழக்கங்கள், குறிக்கோள்கள், கண்ணோட்டங்கள் போன்றவைகளெல்லாம் சத்தியத்தின் ஆவி மனதில் பதியப்பட்டவர்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாயிருக்கிறது.

எனவே, இவைகள் ஒன்று மற்றொன்றுடன் இசைவில் இருப்பது கூடாத காரியமாயிருக்கிறது. "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது". இதிலிருந்து , முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் கர்த்தருக்கு ஊழியம்செய்வது மற்றும் தேவனுக்குரியவைகளை அவருக்குக் கொடுப்பது என்பது, உலகத்தின் கண்ணோட்டங்கள் மற்றும் உணர்வுகளுக்கு எதிராக நம்மை வைத்துக்கொள்வதை அர்த்தப்படுத்துகிறது. இதுவே கிறிஸ்தவ குணலட்சணத்தின் உண்மையான பரீட்சையாயுள்ளது. "தேவனே முதலாவது" என்ற இந்த பரீட்சைக்கு நிற்பவர்கள், அவர் மனதில் பதிய வைத்திருக்கிற கொள்கைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறவர்கள் மட்டுமே, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இராஜ்ஜியத்தின் அங்கத்தினராக இருப்பதற்கான நம்பிக்கை கொள்ளமுடியும்.

மற்றொரு வார்த்தைகளில், தேவனுடையதை தேவனுக்குச் செலுத்துங்கள் என்பது இறுதியாக, பூமிக்குரிய ஒவ்வொரு விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் நாம் விலையாகக் கொடுப்பதாக இருக்கும். ஆனால் உண்மையுள்ளவர்க்கு, விசுவாசமுள்ளவர்க்கு தேவன் இழப்பீட்டை வழங்குகிறார். அவர்கள் இழந்த உலகப்பூர்வமான புன்னகைக்கு பதிலாக. பரலோகத்தகப்பனின் புன்சிரிப்பையும். தங்கள் மீட்பரின் தயவையும் பெறுகிறார்கள். கர்த்தர் நிமித்தமாகவும், தேவன் நிமித்தமாகவும், தெய்வீக சத்தியத்தினிமித்தமாகவும், அவர்கள் பலியாக செலுத்தின எல்லாவற்றிற்கும் நூறத்தனைக்கும் அதிகமாக, இந்த தற்கால ஜீவியத்தில் ஈடுசெய்யப்படும் என்ற எஜமானின் வாக்குறுதியையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த தற்கால ஜீவியத்தில், அபரிதமாக ஈடுகட்டப்படுவதுடன், வரவிருக்கிற யுகத்தில் அதன் தயவுள்ள நிலைகளின்கீழ், நித்திய ஜீவனுக்கான உறுதியும் வருகிறது.

---------

R 5526

# தற்கால நெருக்கடிநேரம்
# PRESENT CRISIS

**"யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் ; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே, ஆனாலும் முடிவு உடனே வராது" – மத்தேயு 24:6.**

சுவிசேஷ யுகத்தின் முடிவில் வரவிருக்கும் ஒரு மகா உபத்திரவக்காலத்தைக் குறித்து இந்த வேத வசனங்கள் பேசுகின்றன. இந்த மகா உபத்திரவம் பற்றி நமது கர்த்தர் மத்தேயு 24ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசனமாக பதிவு செய்திருக்கிறார். பூமியின்மேல் வரும் ஆபத்துக்கள் மற்றும் வானங்கள் அசைக்கப்படுதல் போன்ற நிகழ்வுகளை உருவகமாகக்கூறி, நம்முடைய நாட்களின் மறக்கமுடியாத நிகழ்வுகளைப் பற்றிப் பேசுகிறார். இது தொடர்பாக அவர் பேசுகையில், "அப்படியே இவைகளெல்லாம் நிறைவேற நீங்கள் காணும்போது, உங்கள் தலைகளை உயர்த்தி களிகூறுங்கள், ஏனெனில் உங்கள் இரட்சிப்பு சமீபமாயிற்றென்று அறியுங்கள்" என்று இந்த உச்சகட்ட நிகழ்வை சபையினுடைய மீட்போடு தொடர்புபடுத்தி, அவர்கள் பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோக சுபாவத்திற்கு மாறுவதைக் குறித்தே பேசுகிறார்.

"யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் ; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே, ஆகிலும் முடிவு உடனே வராது " என்று நம் கர்த்தர் கூறுவது இது தொடர்பாகவே இருக்கிறது. இவைகள் யுகம் முழுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வரவிருக்கும் மகா உபத்திரவக் காலத்தைக் குறித்து அவர் குறிப்பிடுகையில், நமது கர்த்தருடைய மனதில் யுத்தங்கள் ஒரு முக்கியமான காரியமாக இருந்தது என நாம் எண்ணக்கூடாது. அந்த மகா உபத்திரவமானது தானியேல் தீர்க்கதரிசனத்தில், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என சித்தரிக்கப்பட்டுள்ளது – தானி12 :1.

நமது கர்த்தர் இதே உபத்திரவக் காலத்தைக் குறித்து லூக்கா 21 :24இல் பேசுகையில், "புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதிகளால் மிதிக்கப்படும் " என்றார். இந்த புறஜாதியாரின் காலங்களானது, புறஜாதி தேசங்களால் இவ்வுலகம் ஆளப்படுகிற ஒரு காலப்பகுதியைக் குறிக்கிறது. உலகத்திற்கு அரசாங்கத்தை தருவதில் தங்களுடைய திறமையை புறஜாதிகள் காண்பித்தார்கள். புறஜாதி அரசாங்கங்களின் கைகளில் இந்த உலகத்தை தருவது என்பது நிழலான இஸ்ரயேலரிடமிருந்து அடையாளமான ராஜ்யம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்றது. சிதேக்கியாவின் வீழ்ச்சியோடுகூட அவரிடமிருந்த கிரீடத்தையும் எடுத்து, மேசியாவின் இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும்வரை அந்த இராஜ்யம் கவிழ்க்கப்படும் என கர்த்தர் விளம்புகிறார் – எசேக்கியேல் 21: 25–27.

அதே சமயத்தில், நேபுகாத்நேச்சார் என்ற இராஜா ஒரு கனவு காண்கிறார். என்னவெனில், தேவ இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் முன்பு, அந்த இடைப்பட்ட காலத்தில், புறஜாதி தேசங்கள் இவ்வுலகை ஆண்டுகொள்ளும் என்பது சித்தரிக்கப்பட்டுள்ளது. இராஜா மறந்துபோன கனவை, தானியேல் இராஜாவுக்குக் காண்பித்து, அதன் விளக்கத்தையும் விவரித்தார். இராஜா ஒரு மிகப்பெரிய சிலையை கனவில் கண்டதாகவும், பொன்னாலான அதின் தலையானது பாபிலோனிய இராஜ்யத்தைக் குறிப்பதாகவும், வெள்ளியினாலான அதின் மார்பானது மேதோ–பெர்சிய சாம்ராஜ்யத்தைக் குறிப்பதாகவும், வெண்கலத்தினாலான வயிறும் தொடையும் கிரேக்க சாம்ராஜ்யத்தைக் குறிப்பதாகவும், இரும்பிலான கால்கள் ரோம சாம்ராஜ்யத்தைக் குறிப்பதாகவும் காண்பிக்கிறார். அதின் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாகிய பாதங்கள் பரிசுத்த ரோம இராஜ்யத்தைக் குறிக்கிறதையும் அவர் காண்பிக்கிறார். கையால் பெயர்க்கப்படாத ஒரு கல், அந்த சிலையின் இரும்பும் களிமண்ணுமாகிய பாதத்தில் மோதி, அதை சிறுசிறு துண்டுகளாக நொறுக்கிவிட்டது. இந்த சிலையின் பாதத்தை நொறுக்குதல் என்பது இந்த யுகத்தின் முடிவில் வரும் என்றும், அதுவே மேசியாவின் இராஜ்யத்துக்கான ஸ்தாபகத்தின் ஆதாரமாக இருக்கும் என காண்பித்தார் – தானி 2:31–45.

இந்த இராஜ்யங்கள் இங்கு இருக்கும் வரைக்கும், அவைகளும் மேசியாவின் இராஜ்யமும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகமுடியாது. புறஜாதி இராஜ்யங்களானது சுயநலம் மற்றும் அடக்குமுறையின் அஸ்திபாரத்தில் உள்ளது. கிறிஸ்துவின் இராஜ்யமோ நீதி, அன்பு, இரக்கத்தின் அடித்தளத்தின்மேல் சமாதானப் பிரபுவின்கீழ் இருக்கும். இவை இரண்டும் ஒரே சமயத்தில் ஆளுகை செய்யமுடியாது. எனவே மேசியா தம்முடைய இரண்டாம் வருகையில் வரும்போது, புறஜாதி தலைமையதிகாரமாகிய "பலவான்" முந்தி கட்டப்படவேண்டும் என முன்னுரைத்திருக்கிறார். மேலும் சிதைந்துபோன உலக ஆதிக்கங்களின்மீது நீதியான அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என்றும் முன்னுரைக்கிறார்.

தற்போதைய பயங்கர போர்(முதலாம் உலகப்போர்), தேவவார்த்தையின் முழு அர்த்தத்தின்படி மகா உபத்திரவக் காலமாக இருக்காது. மாறாக, அதினுடைய முன்னோட்டமே. வேதத்தின்படியான மகா உபத்திரவக்காலமானது அராஜக நிலைமையை கொண்டுவரும். அதாவது ஜனங்களின் பரவலான எழுச்சியைக் கொண்டுவரும். தீர்க்கதரிசி உரைக்கிறபடி, "ஒவ்வொருவனுடைய கரமும் தன் அயலானுக்கு எதிராக இருக்கும். போகிறவனுக்கும் வருகிறவனுக்கும் நெருக்கடியினிமித்தம் சமாதானமில்லை " –சகரியா 8 : 10.

**பூமியின் திராட்சைப் பழங்கள்**

மனித சுயநலம், போர்க்குணம் மற்றும் பேராசை ஆகியவற்றின் இயல்பான விளைவுகளாகிய இந்த

விஷயங்களில், அவரது கரம் இருப்பதாக கர்த்தர் அறிவிக்கிறார். கர்த்தர் இவை எல்லாவற்றிலும் கிரியை செய்யத்தக்கதாக, இவ்வுலகத்தின் உணர்வைத் தூண்டுகிற அறிவை, சரியான நேரத்தில் அவர்களுக்கு அருளியிருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் தங்கள் இருதயங்களில் பாவம் மற்றும் சுயநலத்துடன் இருக்கும் மனிதர், அந்த அறிவை ஞானமாகவும், சரியாகவும் பயன்படுத்தமுடியாத நிலையில் இருக்கிறார்கள். எந்த ஒரு நபரையோ அல்லது வகுப்பாரையோ வெளிப்படுத்தாமல், இந்த உலகத்திலுள்ள அறிவானது, ஒரு குறிப்பிட்ட சிலரிடத்தில் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருந்தால், அறிவின் இந்த அதிகரிப்பினால் அவர்கள் மற்றவர்களைவிட மிக அதிகமாக முன்னேறுவதைக் காணமுடியும். அதினால் இறுதியாக, செல்வமானது வெகுசிலருடைய கைகளில் குவிந்து, உலகமனைத்தும் இந்த வெகு சிலருடைய அடிமைகளாக மாறிவிடுவர். செல்வந்தர்களிடம் இருக்கும் பணமானது, மிக வேகமாக பெருகிவிடும். மறுபக்கம் ஜனத்தொகையானது ஒரு நூற்றாண்டில் இரட்டிப்பாகிவிடும். தற்கால சூழ்நிலையின் எதேச்சதிகாரத்தினால் ஜனங்கள் ஆளப்படும்போது. பெரும்பான்மையினர் அடிமைத்தனத்துக்குள் போவதை யார் காணாமல் இருக்கமுடியும் ?

அரசாங்கங்கள் வலுவான நிலையில் இருக்கும்வரை, அவைகளைக் கவிழ்ப்பது என்பது சாத்தியமற்றது. இந்த பத்திகளில் நாம் அடிக்கடி முன்வைக்கும் நமது எண்ணம் என்னவெனில், ஒரு பெரும் போரானது தேசங்களை பலவீனப்படுத்தி, அராஜகத்துக்கு வழிவகுக்கும்.அப்படிப்பட்ட பெரும் போரானது உலகத்தையே பொருளாதார ரீதியில் முடக்கி, ஜனங்களுடைய கண்களுக்கு முன்பாக ஆட்சியாளர்களை இழிவுபடுத்திவிட்டு, அராஜகத்திற்கு வழியைத் திறக்கும். முந்தைய கால ஜனங்கள் தங்கள் ஆட்சியாளர்களை தெய்வீகக் கடவுள்களாக பார்த்தனர். அதிகாரத்திற்கான இந்த பெருமதிப்பு, இன்னும் ஓரளவிற்கு பெறப்படுகிறது. குறிப்பாக ரஷ்யாவில் அராஜகவாதிகளாக இருக்கிறவர்களைத்தவிர, ஜனங்கள் ரஷ்யப் பேரரசர்களை (Czar) கிட்டத்தட்டஆராதிக்கிறார்கள். தற்கால யுத்தம் நாம் எதிர்பார்த்த ஒன்றுதான். அது இவ்வுலகின் இரத்தம்(உயிர்) மற்றும் பொக்கிஷங்களை உறிஞ்சிவிடும். பின்பு தேசங்கள் வியாதிப்பட்டு. பெலவீனப்பட்டு, சோர்ந்து, பொதுஉடைமைக் கோட்பாட்டிற்கு இரையாகி, பின்பு அராஜகமாகிவிடும். இவ்வாறு வேதாகமத்திலுள்ள முன்னறிவிப்புகளுக்கு இசைவாக, பூமியானது "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டது வரும் " என்கிற மேசியாவின் இராஜ்யத்தை வரவேற்கத் தயாராகிவிடும் – ஆகாய் 2 :7.

**தேவனுடைய ஜனங்களுக்கான முறையான மனப்பான்மை**

"ஆகையால், நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம்(சமூகம்) என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" –செப்பனியா 3 :8,9.

"எனக்குக் காத்திருங்கள்" என தேவன் எதைக் குறிப்பிடுகிறார் ? அவருடைய நேரத்திற்காக நாம் காத்திருக்கவேண்டுமென்று அர்த்தப்படுத்துகிறார். உலகத்தின் காரியங்களை சமநிலைப்படுத்துவதாக அவர் கூறுகிறார். எல்லா இராஜ்யங்களும் பொதுவான அராஜகத்தினால் மூழ்கிவிடும் என அறிவிக்கிறார். வெப்பத்தின் உக்கிரம், விவாதம், சலசலப்பு, சச்சரவுகள் அப்போது இருந்து, அந்த நேரத்தில் உலக தேசங்கள் உருகிவிடும். அதாவது சடுதியாக வீழ்ச்சியடைந்துவிடும். இதை நாம் நம்புகிறோம், கிறிஸ்தவர்கள் பட்டயத்தில் திருப்தியடைவார்கள் என்று நாம் எண்ணுகிறதில்லை."பட்டயத்தை எடுப்பவன் பட்டயத்தினால் அழிவான்" என்று நம் கர்த்தர் கூறினார்.

"உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது", அதில் மாற்றங்களைச்செய்ய அவருக்கு முழு அதிகாரம் இருக்கிறது, அவைகளை அவர் அனுமதிக்கிறார் என்பதை உணரும்போது, தேவஜனங்கள் ஒதுங்கி நிற்கவேண்டும். தேவன் அவைகளை அனுமதித்திருந்தாரானால் அவர்களை தூக்கியெறிய முற்படுவது நமக்குரியதல்ல.

பூமியெல்லாம் எரிச்சலின் அக்கினியினால் அழியும் என்ற அடையாளமானது, மதசார்பற்ற எழுத்தாளர்களாலும் சில நேரங்களில் கூறப்பட்டுள்ளது. செய்தித்தாள்களில் "பெரும் மூர்க்கத்தனம்" என்பதைப் பற்றி – அதாவது, பிரச்சனை, சண்டை, குழப்பம் ஆகியவற்றின் இந்த நெருப்பைப் பற்றி வாசிக்கிறோம். பூதங்கள் வெந்து உருகிப்போம் என்பது, தொழிலாளர், முதலாளித்துவம், மதங்கள் போன்ற அமைப்புகளாகும். தேசங்களை கர்த்தர் ஒன்றிணைத்து வருகிறார். இந்த "நாளில்" அதாவது கடந்த 40 வருடங்களில் ஒன்றுகூட்டி வருகிறார். கூட்டிச்சேர்த்தல் என்பது தேசங்களை ஒன்றாக இழுப்பதைக் குறிக்கிறது.

கர்த்தர் இந்த வேலையை செய்து கொண்டிருக்கையில், இத்தேசங்கள் ஒருவருக்கொருவர் எதிராக திரும்பச்செய்கிறார் என நாம் நினைக்கக்கூடாது. அவைகள் தங்களுடைய சுயநல மனப்பான்மையின்படி நடக்க தேவன் அவர்களை அனுமதித்திருக்கிறார், இதன் விளைவு சண்டை சச்சரவுகளே. அறிவின் வளர்ச்சி இதைச்செய்து, அமைதியற்ற சமுதாய நிலையினைக் கொண்டுவரும்.

**இறுதியான கண்ணோட்டம்** (Final outlook)

இந்தப் போரானது மிகவும் விநோதமான சூழ்நிலைகளைக் கொண்டுவந்திருக்கிறது. ரஷ்யாவும்

ஆஸ்திரியாவும் நீண்டகாலமாக மத்திய தரைக்கடலுக்கு ஒரு திறப்பைக் கொண்டிருக்கவேண்டும் என்று ஆர்வமாக உள்ளன. ஆனால் அதைப் பாதுகாக்கும் எந்தவொரு முயற்சியினாலும் பெரும் போர் உருவாகும் என அஞ்சியுள்ளனர். அவர்கள் சிறிய மாநிலங்களான பால்கன் மாநிலங்களில் ஏறக்குறைய கவனம் செலுத்துகின்றனர். ''இடைநிலை மாநிலங்கள்'' என அவர்கள் அழைக்கிற இந்த மாநிலங்களில் ஒருவருக்கொருவர் செல்வாக்கை பலவீனப்படுத்த தங்களால் இயன்ற அனைத்தையும் செய்திருக்கிறார்கள். பணம் பெற்றுக்கொள்ளும் முகவர்கள் ஒரு தேசத்தால் மற்றொரு தேசத்திற்கு எதிராக விரோதத்தை உருவாக்க, அந்த பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரியா தேசத்து சிம்மாசனத்தின் வாரிசு ஒரு செர்பியனால் படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக, செர்பியருக்கு எதிரான போருக்கு தனக்கு ஒரு நல்ல காரணம் இருப்பதாக ஆஸ்திரியா நினைத்தது. இந்தக் காரணம் போதுமானதாக இருக்குமென ஆஸ்திரியா நம்பினது. இது சார்பாக ரஷ்யா ஒன்றும் சொல்லாது எனவும் ஆஸ்திரியா நினைத்தது. அல்லது இல்லையெனில் ஜெர்மனியின் அசைந்த முஷ்டி அந்நாட்டைத் தடுக்கும். ஆனால் இம்முறை அது பலனளிக்கவில்லை. ரஷ்யா தனது உறவினர்களான செர்பியர்களை ஆதரிக்கத் தீர்மானித்து, இது மற்ற தேசங்களை உள்ளே கொண்டுவந்தது.

மாபெரும் ஐரோப்பிய மன்னர்களும், பேரரசர்களும் தங்கள் சொந்த சிம்மாசனம் தத்தளிப்பதையும், அந்தப் போர்கள் அவர்களுடைய ஜனங்களை ஒன்றிணைக்கும் என்பதையும் உணர்ந்துள்ளனர். எந்த ஒரு யுத்தம் தொடர்பாக மக்களின் விருப்பம் ஒரு முக்கிய காரணியாகும். ஒரு சமூக எழுச்சியின் உள்நாட்டு சண்டையைவிட மற்றொரு தேசத்துடன் ஒரு போர் விரும்பத்தக்கதாயிருந்தது. அவர்களின் நிதானிப்பு உண்மையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது. பாரீஸில் இந்த ஒரு சோசியலிஸ்ட், போருக்கு எதிராக ஏதோ சொன்னதினால் அவர் உடனடியாக படுகொலை செய்யப்பட்டார்.

நம்முடைய எண்ணப்படியாக இப்போரானது தேசங்களை பலவீனமாக்கி, வறுமைக்குள்ளாக்கி விடும். அதனால் வேதாகமம் காட்டுகிறபடி, அது அராஜகத்திற்கு அவர்களைத் தயார்ப்படுத்தும். துருப்புக்கள் கலைக்கப்படுதல் மற்றும் அவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்புவது, ஏமாற்றம், அதிருப்தி மற்றும் மன்னர்கள், ஆட்சியாளர்கள், பிரபுக்கள்மீதான கோபமானது சந்தேகத்திற்கிடமின்றி ஐரோப்பா முழுவதிலும் தீவிரிக்கும். மேலும் வேதாகமம் முன்னுரைத்தபடி, மற்ற நாடுகளுக்கும் பரவும். கிறிஸ்துவின் இராஜ்யம் இதனுடன் தொடர்புடையது என்பதை கிறிஸ்து தம்முடைய மாபெரும் வல்லமையை எடுத்துக்கொண்டு ஆட்சி செய்யப்போகிறார் என்ற அர்த்தத்தில் நாம் புரிந்துகொள்கிறோம். தம்முடைய சேனையை உருவகமாகக் குறிப்பிட வெட்டுக்கிளிகளைப் பற்றி பேசினதுபோலவே, கர்த்தர் இந்த அராஜகவாதிகளை, ''அவருடைய பெரியசேனை'' என உருவகமாகக் கூறுகிறார். பரிசுத்தவான்கள் இந்த சேனையில் இருப்பதே இல்லை. பிசாசைக்கூட தம்முடைய பிரதிநிதியாக கர்த்தர் உபயோகித்திருக்கிறார். மேலும் ''மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்'' – சங் 76 : 10. அராஜகவாதிகள் கர்த்தருடைய மகாசேனையின் ஒரு பகுதியாக இருக்கலாம், அதில் கர்த்தர் அவர்களுடைய திட்டத்தை மேற்பார்வையிடுவார்.

இறுதியில் அமெரிக்கா இந்தப் போரில் ஈடுபடும். மற்ற நாடுகளுடன் சேர்ந்து அதுவும் வீழ்ச்சியடையும். இருந்தபோதிலும் அமெரிக்கா இந்தப் போரில் ஈடுபடும் என்பதால் அப்படி நடக்கவேண்டிய அவசியமில்லை. அப்படி செய்வது உண்மையில் மிகவும் முட்டாள்தனமாக இருக்கும். மக்கள் தங்களைத்தாங்களே ஆள்வதால் நமது அரசு பலமாக உள்ளது. அவர்கள் தங்கள் சொந்த அரசாங்கத்தையும் அவர்களின் சொந்த சுயாதீனத்தையும் பெற்றிருப்பதோடு, தங்களின் சொந்த சட்டங்களைக்கூட மாற்றிக்கொள்ளமுடியும். இதை அவர்கள் மேலும் மேலும் செய்கிறார்கள் என்று நம்புகிறோம், மேலும் இம்மாதிரி செய்யத் தயாராவதினால், இறுதியாக நமது அரசாங்கம் சோஷலிச அடிப்படையில் கீழான நிலைமைக்கு வந்துவிடும். ஆனால் இது நடப்பதற்கு முன் தங்களைக் காத்துக்கொள்ள நினைக்கும் செல்வந்தர்கள் சட்டங்களை மீறி விஷயங்களைக் கொண்டுவருவார்கள். இதனால் அவர்கள் அநீதியை எதிர்ப்பதாக நம்பி, சிக்கலை துரிதப்படுத்துவார்கள். தவிர்க்கமுடியாத சமன்பாட்டை முடிந்தவரை மனதார ஏற்றுக்கொள்வது அனைவருக்கும் புத்திசாலித்தனமாக இருக்கும். ஆனால் அவர்கள் புத்திசாலிகளாக இருப்பார்களா ?

தோல்வியை ஏற்றுக்கொண்டு தாங்கள் விரும்பிய உரிமைகளை விட்டு சரணடைவதைவிட, வீதிகளில் இரத்த ஆறுஓடச்செய்வதே மனித சுபாவமாயுள்ளது. மக்கள் வெறுப்பினாலும், நியாயமற்றவைகளுக்காக முறையிடுவதிலும் வழிநடத்தப்படுகிறார்கள். சில உண்மைகள் முன்வைக்கப்பட்டாலும், அதை விளக்குவதில் உண்மையில்லை. ஆனால் அநேகர் சோஷலிசத்திற்கு அவர்கள் நினைப்பதுபோல் தயாராகிவருகின்றனர். அராஜகமானது ஐரோப்பாவில் இருப்பதுபோல் இங்கும் வெகுசீக்கிரத்தில் வரும் என்று நாம் சொல்லலாம்.

**அர்மகெதோன் எதிர்காலத்திற்குரியது**

அர்மகெதோன் அடுத்த வசந்த காலத்தில் தொடங்கும் சாத்தியம் இருந்தாலும், அது எப்போது என்று கூற முயற்சிப்பது முற்றிலும் யூகமாகும். ஆயினும் யூத யுகத்தின் முடிவிற்கும், சுவிசேஷயுகத்தின் முடிவிற்கும் இடையில் ஒற்றுமைகள் இருப்பதை நாம் காண்கிறோம். இந்த ஒற்றுமைகள் நமக்கு சற்று

முந்தைய ஆண்டை, அதாவது குறிப்பாக ஆரம்ப மாதங்களை சுட்டிக்காண்பிக்கிறது.

வேத வசனங்கள் காண்பிக்கிறபடி, புறஜாதி அரசாங்கங்கள் தங்கள் அதிகாரத்தின் குத்தகைக் காலம் காலாவதியாகிவிட்டது என்ற அறிவிப்பை, தங்கள் சொந்த ஜனங்களிடமிருந்து பெறுவார்கள் என காண்பிக்கிறது. வானத்தில் உள்ள மனுஷகுமாரனின் அடையாளத்தை ஜனங்கள் கவனிப்பார்கள். கர்த்தரின் நியாயத்தீர்ப்புக்கள் உலகில் வெளிப்படத் துவங்கும், அவை அவர்களின் அநேக நலன்களுக்கு எதிராக இயங்கும். அவருடைய பிரசன்னத்தின் இந்த வெளிப்பாடு, வேதவசனத்தின்படி எபிப்பானியா – அதாவது மகிமையின் இராஜாவின் பிரகாசம், ''வெளிப்படுதல்''என்று அழைக்கப்படுகிறது. ''கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்(2தெச1:8 ; 7–10).

முதலாவது உபத்திரவம் சபைக்குரிய வானங்களிலிருந்து ஆரம்பித்து, பின்பு சமுதாய அமைப்புகளுக்குள்ளாக முன்னேறும் என தீர்க்கதரிசனம் நமக்கு முன்னுரைக்கிறது. புறஜாதியாரின் காலங்கள் முடிவுபற்றி கொடுக்கப்பட்ட சித்திரமானது, புறஜாதி மேலாதிக்கமாகிய சிலையின் பாதத்தில் ஒரு கல் மோதுவதாகும்(தானி2 :34–35). அதனுடைய தாக்கம் மிகக் கூர்மையாகவும், அவைகளில் ஒன்றையும் விட்டுவிடாதபடி முழுமையானதாயும் இருக்கும். ''காற்று பறக்கடிக்கப்படும் பதரைப்போலிருக்கும்''. வரிசைப்படி அடுத்த நிகழ்வு என்பது எழுதியிருக்கிறபடி, ''ஜனங்களால் விரும்பப்பட்டவர் வருவார்'' என்பதற்கு இசைய அது மேசியாவின் இராஜ்யமாக இருக்கும்.

---

**R 5527**

## சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்ட ஜனம்

## THE TRIED AND PROVEN PEOPLE

**“உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்” – உபாகமம்13:3.**

தேவன் இஸ்ரயேல் புத்திரருடைய முற்பிதாவாகிய ஆபிரகாமுடன் ஏற்படுத்தின வாக்குத்தத்தத்திற்கு இசைவாக, அவர்களுடன் ஓர் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருந்தார். ஆபிரகாமுடன் செய்த தன் உடன்படிக்கைக்கு நானூற்று முப்பது ஆண்டுகளுக்குப்பிறகு, கர்த்தர் இஸ்ரயேலை அடிமைத்தனத்தின் வீடாகிய எகிப்திலிருந்து விடுதலையடையச்செய்து, அவர்களை வனாந்தரத்தில் ஒரு தேசமாக ஏற்படுத்தினார். அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்வார்களேயானால். பூமியிலுள்ள மற்றெல்லா ஜாதிகளைப்பார்க்கிலும் அவர்களை ஒரு பெரிய ஜாதியாக்கப்போவதாக அவர்களிடம் தம் தீர்மானத்தை அறிவித்திருந்தார். அவர்கள் கர்த்தருடனான இந்த உடன்படிக்கையில் பிரவேசித்திருந்து, இந்தத் தெய்வீக ஏற்பாட்டை ஏற்றுக்கொள்வதிலும், இறுதியில் முழு மனுக்குலத்துக்கும் தேவனுடைய ஆசீர்வாதத்தை எடுத்துச்செல்லும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதிலும் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அறிக்கை செய்தனர். ஆனால் இப்போது இஸ்ரயேலர் யோர்தானைக் கடந்து வாக்குத்தத்த தேசத்திற்குள்ளாக பிரவேசிக்க வேண்டியிருந்தது.அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, அவருடைய ஜனங்களாக மாறியது மாத்திரம் போதாது என்றும், தேவன் அவர்களைப் பரீட்சித்துப் பார்ப்பார், அவர்களை நிரூபிக்க செய்வார் என்றும், மோசே அவர்களை விட்டுப் பிரியும் முன்பாக அவர்களுக்கு எடுத்துச்சொல்லியிருந்தார்.

ஏன் தேவன் அவர்களைச் சோதித்துப் பார்க்கவேண்டும் ? ஒரு ஜனங்களாக அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தலைமையின் கீழாக எகிப்தை விட்டு வந்திருந்தனர். அவர்கள் செங்கடலைக் கடந்துவந்திருந்தனர். இந்த விடுதலைக்காக அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினார்கள். அவர்கள் நாற்பது வருஷங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து கிடைத்த தண்ணீரால் அவர்கள் புத்துயிர் அளிக்கப்பட்டனர். வானத்திலிருந்து வந்த அப்பத்தால் போஷிக்கப்பட்டனர். தேவன் அவர்களைத் தம்முடைய ஜனங்களாக ஏற்றுக்கொண்டபோது. அவர்களைக்குறித்து சகலத்தையும் அவர் அறிந்திருந்தார். அவர் எதை அதிகமாக அவர்களிடமிருந்து எதிர்பார்த்திருக்கமுடியும் ?

ஆனால் அவர்களுடைய பிதாக்கள் தேவனுக்கு விரோதமாய்க் கலகம் செய்து, தாங்கள் சேவிப்பதாக உடன்படிக்கை செய்திருந்த அவருக்கு விரோதமாகவே முறுமுறுத்ததாலும், பாவத்தினிமித்தமாகவும், வனாந்தரத்தில் விழுந்துபோனார்கள். அந்த உடன்படிக்கை எந்த அளவுக்கு அவர்களுடைய பிள்ளைகளால் கைக்கொள்ளப்படும் என்பதை தேவன் சோதிக்க விரும்புவதாக, தற்போது மோசே அவர்களிடம் விளக்கினார். இது குறித்து அவர் பின்வருமாறு கூறினார் : தேவன் உங்கள் பிதாக்களுடன் செய்துகொண்ட இந்த உடன்படிக்கைக்குள் நீங்களும் பிரவேசித்திருக்கிறீர்கள். கர்த்தருடைய பணிவிடைக்காரர்களாக இருப்போம் என்று நீங்கள் அர்ப்பணிப்பு செய்திருக்கிறீர்கள். இப்போது , உங்கள் உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்ற நீங்கள் தயாராக இருக்கிறீர்களா ? என்று கேட்கிறார்.''உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு

இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்'' – உபாக 13:3.

## இஸ்ரயேல் மீது தேவனுடைய அற்புதமான பராமரிப்பு

நீங்கள் தேவனை மதித்துணர்ந்திருக்கிறீர்களா ? என்பதே கேள்வியாக இருந்தது. அவருடைய இரக்கத்தின் மதிப்பினை நீங்கள் உணருகிறீர்களா ? உங்களுடைய முழு உள்ளத்துடனும் – உங்கள் எல்லா வல்லமைகளுடனும், உங்களுடைய முழு பலத்துடனும் நீங்கள் அவரை உண்மையாக அன்புகூருகிறீர்களா ? நீங்கள் கர்த்தரிடம் முழுமையாக சரணடைந்துவிட்டீர்களா ? ஏனெனில், '' உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, நீ அறிந்திராத மன்னாவினால் போஷித்து, உன் பிதாக்கள் அறியாததாகிய, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படி செய்தார். இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவுமில்லை, உன் கால் வீங்கவும் இல்லை. ஒருவன் தன் புத்திரரைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்துகொள்வாயாக. ஆகையால், உன் தேவனாகிய கர்த்தரின் வழிகளில் நடந்து, அவருக்குப் பயப்படும்படிக்கு, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக்கடவாய்.

''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுக்களும் ஏரிகளுமுள்ள தேசம்.அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச் செடிகளும் அத்திமரங்களும் மாதுளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது ஒலிவமரங்களும், எண்ணையும் தேனுமுள்ள தேசம்; அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவுபடாததுமான தேசம்; ... ஆகையால், நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்தரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு''– உபாகமம் 8:2–11.

## ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான மேலான தயவுகள்

எப்பேர்ப்பட்ட ஒரு புத்திமதி! உண்மைத்தன்மைக்கு எப்பேர்ப்பட்ட ஓர் ஊக்கமளிக்கும் பரிசு! அப்பேர்ப்பட்ட தேவனை யார்தான் சேவிக்க மாட்டார்கள்! இந்த வேதவாக்கியத்தைக்கொண்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர் எப்பேர்ப்பட்ட ஓர் அற்புதமான பயன்பாட்டினை ஏற்படுத்தமுடியும்! நம்முடைய தேவன் தம்முடைய உடன்படிக்கையின் ஜனமாகிய நம்மை, இந்த உலகம் எனும் வனாந்தரத்தின் வழியாக எவ்வளவு அற்புதமாக வழிநடத்தி நாளுக்கு நாள் நம்முடைய தேவைகளுக்கான ஏற்பாடுகளை அளித்துவருகிறார்! எப்படியாக அவருடைய அன்பான கரத்தின் சிட்சைகள் நம்முடைய கால்களை அலையவிடாமல் தடுத்துள்ளன; அல்லது நாம் எந்த சமயத்திலாவது வலதுபுறமாகிலும் இடதுபுறமாகிலும் விலகிப் போயிருப்போமானால், அவருடைய அன்பு நம்மை எவ்வாறெல்லாம் திரும்பச் செய்திருக்கின்றது! மேலும் அவர் நம்மை நல்ல தேசமாகிய பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள, கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும், அத்திமரங்களும், மாதுளஞ்செடிகளுமுள்ள, ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள, தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும், அதாவது, பரலோக அப்பத்தைப் புசிக்கத்தக்கதும், ஒன்றும் உங்களுக்குக் குறைவுபடாததுமான தேசத்துக்குக் கொண்டுவரவில்லையா ? உண்மையாகவே, இவையெல்லாவற்றிலும் நமக்கு எந்தக் குறையும் இருந்ததில்லை. பூர்வக்காலத்து இஸ்ரயேலர்கள் தேவனிடமான தங்களுடைய நன்றியுணர்வை நிரூபிப்பதற்கான காரணம் இருந்திருக்கிறதெனில், ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நமக்கு இன்னும் எவ்வளவு அதிகப்படியான காரணம் இருக்கவேண்டும்!

## மோசேயின் மரணவேளையிலான செய்தி

கர்த்தர் இஸ்ரயேலர்களின் நிமித்தமாகவும், அவர்களுடைய பரிசுத்த உடன்படிக்கையைக் குறித்தும் பாராட்டின அன்பான இரக்கங்கள் அனைத்தையும் குறித்து மோசே அவர்களுக்கு நினைப்பூட்டினபிறகு, அவர்கள் ஆளப்படவேண்டிய கர்த்தருடைய கட்டளைகளை அவர்களுக்குத் தெரிவித்தபிறகு, ஒருவேளை அவர்கள் தேவனை மறந்து அவர்களின் உடன்படிக்கையை முறித்துப்போட்டார்களானால் அதினால் ஏற்படும் விளைவுகளைக் குறித்தும் அவர்களுக்கு மிகவும் கடுமையான எச்சரிக்கைகளை வழங்கினார். நம்முடைய ஆதார வசனம் அவர் ஆற்றிய பிரசங்கத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது. மேலும் இது உபாகம புஸ்தகத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கினதாயிருந்து, பிஸ்கா கொடுமுடியின் மிக உயர்ந்த பகுதியான நெபோ மலையில் மோசே மரிப்பதற்கு சற்று முன்பு இஸ்ரயேலரிடம் ஆற்றப்பட்ட பிரசங்கமாயுள்ளது. அந்த மலையிலிருந்துதான் கர்த்தர் மோசேக்கு கானான் தேசம் முழுவதையும் காண்பித்தார். அங்கேயே அவர் அடக்கமும் பண்ணப்பட்டார். மேரிபாவின் தண்ணீர்கள் அருகாமையில், தேவனுடைய கட்டளையை மீறி கன்மலையை அடித்து, மோசே

கீழ்ப்படியாமல் போனதினிமித்தமாக, அவர் யோர்தானைத் தாண்டிச் செல்லக்கூடாது என்று தேவன் அவரிடம் கூறியிருந்தார். இந்தப் பிரசங்கம் இஸ்ரயேலுக்கு அவர் ஆற்றின கடைசி செய்தியாயிருந்து, இது மிகவும் மனதைத் தொடக்கூடியதாயும், ஈர்க்கக்கூடியதாயும் இருக்கின்றது.

மோசே தனது செய்தியை பின்வரும் இந்த வார்த்தைகளுடன் நிறைவுசெய்தார்: "நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர்"(உபாகமம் 30: 19,20). இத்தகைய வார்த்தைகள் அப்பேர்ப்பட்ட நேரத்தில் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாயிருந்தன. ஏனென்றால், தான் மரிக்கப்போவதாகவும், அவர்களுடன் யோர்தானைக் கடக்க தேவன் ஒரு புதிய தலைவரை அவர்களுக்குக் கொடுப்பார் என்றும் மோசே அவர்களிடம் கூறியிருந்தார்.

**"உத்தம இஸ்ரயேலர்கள்" மட்டும் தேடப்படுகிறார்கள்**

உள்ளபடியே, மோசேக்கு தேவன் உறுதியளித்ததைப்போல, இஸ்ரயேல் தங்களுடைய உடன்படிக்கைக்கு ஏற்ப ஜீவிக்கவில்லை என்பதை நாம் அறிவோம். அவர்கள் வனாந்தரத்தில் மரித்த தங்கள் பிதாக்களைப்போல இருந்தார்கள். இருப்பினும், கானானில் அவர்கள் ஜீவித்த நூற்றாண்டுகளின்போது, தனிப்பட்ட விதத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கும் தயவுக்கும் பாத்திரமானவர்கள் என்று நிரூபித்த ஏராளமானோர் இருந்தனர். எபிரேயர் 11இல், பரிசுத்த பவுல் இவர்களைக் குறித்தும், தேவனுக்கு இவர்கள் காண்பித்த நேர்மையைக் குறித்தும் அதில் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் தங்கள் சகோதரர்களைப் பார்க்கிலும் அல்லது பொதுவான மனுக்குலத்தைப் பார்க்கிலும் "மேன்மையான உயிர்த்தெழுதலை" அடையப்போகிறார்கள். மோசே, சாமுயேல், தாவீது போன்றவர்களையும், பல தீர்க்கதரிசிகளைப் பற்றியும் மற்றும் பூமிக்குரிய வழியில் இவர்களைப் போல் அவ்வளவு கனமும் முக்கியத்துவமும் பெற்றிராதபோதிலும், தேவனைப் பிரியப்படுத்திய கனத்தைப் பெற்றிருந்த பல கதாபாத்திரங்களைப் பற்றியும் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

அவர்கள் முழு இருதயத்தோடும் ஆத்துமாவோடும் கர்த்தருக்குச் சேவைசெய்தது அவர்களைச் சட்டப்படி நீதிமானாக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் வீழ்ச்சியின் மூலமாக அபூரணர்களாகவும் கறைபட்டவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்களிடமிருந்த அனைத்து சக்திகளும் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டன. இவர்கள் தேவனுடைய சுதந்திரர்களாக ஆனபோதிலும், மிக உயரிய பொருளில் சுாடநாலவபடிளகளபக ஆகவில்லை. ஏனெனில் இந்த வாய்ப்பு அவர்கள் வாழ்ந்த காலத்தில் திறக்கப்படவில்லை. மீட்பர் வந்து வழியைத் திறக்கும் வரையில் இந்த மிக உயரிய ஸ்தானத்தை யாராலும் பெறமுடியாதிருந்தது. ஆகவே கிறிஸ்தவ யுகத்திற்கு முன்பு வாழ்ந்த இந்தத் தகுதியுடையவர்கள் அனைவரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றுக்கொள்ளாமல், அதாவது அதன் நிறைவேறுதலை பெற்றுக்கொள்ளாமல் விசுவாசத்தில் மரித்துப்போயினர். ஆனால் "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவர்கள் காத்திருந்தனர்(எபிரேயர் 11: 10). சீக்கிரத்தில் கர்த்தருடைய இந்த உண்மையுள்ள ஊழியக்காரர்கள் "தங்கள் பங்கிற்காக எழுந்திருப்பார்கள்".

ஆனால் திருச்சபையாகிய நாம் அனைவரும் முதலில் பூரணப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. இந்த வகுப்பாரில் நம்முடைய கர்த்தராகிய இயேசு மிக உயரிய இடத்தைப் பிடித்துள்ளார். மேலும் அவர் தம்மைப் பலியாக கொடுத்ததின் மூலமாக தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரைச் சேர்ந்த தம்முடைய சகோதர சகோதரிகளுக்கு வாய்ப்பின் கதவைத் திறந்துவைத்துள்ளார். தேவனுடைய புத்திரர்களாகிய கிறிஸ்துவுடன் உடன்சுதந்திரர்களாக மாறுவதற்கான இந்த அழைப்பின் மூலம் "உத்தம இஸ்ரயேலர்கள்" கனப்படுத்தப்பட்டனர். தங்கள் முழு இருதயத்தோடும் ஆத்துமாவோடும் தேவனிடத்தில் அன்புகூர்ந்தவர்கள் மட்டுமே உத்தம இஸ்ரயேலர்களாக இருக்கிறார்கள். நமது கர்த்தருடைய நாளில் ஜீவித்திருந்த சராசரி இஸ்ரயேலர் இந்த தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரில் ஒருவராய் இருப்பதற்குத் தகுதியற்றவர்களாய் இருந்தனர்; "உத்தம இஸ்ரயேலர்கள்" மட்டுமே அழைப்பை ஏற்றுக்கொண்டனர். இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இந்த உத்தம இஸ்ரயேலர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் இந்த அற்புதமான தயவிற்குள்ளாக பிரவேசித்து வருகின்றனர்.

இந்த மாபெரிய தயவை அடைந்திருக்கிறது, நாம் மாம்சத்தில் ஏறக்குறைய பரிபூரணமாக இருப்பதால் அல்ல. மாறாக, கர்த்தர் வழியைத் திறந்ததாலும், நீதியை நாம் நேசித்திருந்ததாலும், இருதயத்தில் நேர்மை இருந்ததாலும் இம் மாபெரும் தயவைப் பெற்றுள்ளோம். நமது காலத்திற்கு முன்பு, அதாவது, நியாயப்பிரமாண உடன்படிக்கைக் காலத்திற்கும் அதற்கு முன்பும் ஜீவித்தவர்களுக்கும்கூட நீதிமானாக்கப்படுதல் தேவைப்பட்டது,. மேலும் நம்மை விலைகொடுத்து வாங்கிய அதே மீட்பர், அவர்களும் இறுதியில் தேவனுடைய புத்திரர்கள் எனும் ஆசீர்வதிக்கப்பட்ட உறவுக்குள் வருவதற்காக தம்முடைய பலியின் மூலமாக அவர்களுக்கு நீதிமானாக்கப்படுதலை ஏற்படுத்தி வைத்திருந்தார்.

**தேவனுடைய அறிவு வரையறுக்கப்பட்டதா ?**

நமது ஆதார வசனத்தின் இந்த வெளிப்பாடு முன்வைக்கப்பட்ட விதமானது, தேவன் மனுஷருடைய

இருதயங்களை அறிந்திருக்கவில்லை என்பது போன்ற கருத்துப்பதிவை கொடுக்கலாம். தேவனால் இருதயத்தை முழுமையாக வாசித்தறிய முடியும் என்று நமக்கு வேதவாக்கியங்கள் உறுதியளிக்கின்றன. "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு–மிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபிரேயர் 4:13). நம்முடைய இருதயத்தின் எந்த எண்ணமும் நோக்கமும் அவருக்கு மறைவாயிருப்பதில்லை. ஆனால் சர்வவல்லவரைப்பற்றி நாம் சிந்திக்கும்போது – அவர் எதை அறிந்திருக்கிறார் அல்லது எதை அறியாதிருக்கிறார் என்பது குறித்து நம்மால் சரியான ஒரு கருத்தை உருவாக்க முடிவதில்லை. நம்முடைய அனுபவத்தைப் பொறுத்தவரையில், எதிர்காலத்தில் கொடுக்கப்படவிருக்கும் எந்தவொரு சூழலின்கீழும் ஒரு நபர் என்னசெய்வார் என்பதை அறியக்கூடியவர்கள் யாரும் இல்லை. நாம் என்னசெய்வோம் என்பதை ஒருவேளை நம்மால் நினைத்துப்பார்க்கக்கூடும், ஆனால் நமக்கே உறுதியாகத் தெரியாது. இப்படியாக நாம் என்ன செய்வோம் என்பதை நாமே அறியாதிருக்கும்போது, நாம் என்ன செய்வோம் என்பதைப்பற்றி மற்றவருக்கு எப்படித்தெரியும் என்பதை நம்மால் காணமுடியாது. நாளை நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை தேவனால் எப்படி அறிந்துகொள்வது சாத்தியமாகிறது, என்பதை, நாம் ஒரே ஒரு குறிப்பிட்ட காரியத்தை மட்டுமே செய்ய முடியும்படிக்கு நம்முடைய சிந்தையை அவர் நிர்ப்பந்தித்தாலொழிய அல்லது நம்முடைய வழியைக் கட்டுப்படுத்தினாலொழிய, எந்த மனதின் செயல்முறையாலும் நம்மால் புரிந்துகொள்ளமுடியாது.

புறஜாதியாருடைய காலங்களின் விஷயத்தில், பாபிலோன், மேதோ–பெர்ஷியா, கிரேக்கம் மற்றும் ரோம் போன்ற பல்வேறு அரசாங்கங்கள் உலகை அடுத்தடுத்து ஆளுகை செய்வதற்குத் தேவன் அனுமதித்திருந்தார். "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே"(யோபு 38 : 11) என்று அவரால் எப்படிச் சொல்லமுடியும் என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். விழுந்துபோன சந்ததியில் , பாவத்தின் போக்கு கட்டுப்படுத்தப்–படாவிட்டால், அது எந்த எல்லைக்கும் ஜனங்களை வழிநடத்திச்செல்லும். இப்படிப்பட்ட வழிகளில், தேவன் எவ்வாறு முன்கூட்டியே அறிந்துகொள்கிறார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. திருச்சபை எப்போது தெரிந்துகொள்ளப்படும் என்பதும் அவருக்குத் தெரியும், இந்தத் தேர்ந்தெடுத்தலைப் பற்றி அவர் ஒரு நிச்சயமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்திக்கிறிஸ்து அமைப்பை, அதாவது உண்மையான சபை போன்ற ஒரு போலியான அமைப்பை எழுப்பும் மனப்பான்மையை சாத்தான் கொண்டிருப்பான் என்பதை அவர் முன்னரே அறிந்திருந்தார். அந்த நிலைமைகளின் கீழ் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள்ளாக எத்தனை பரிசுத்தவான்கள் உருவாக்கப்படமுடியும் என்பதையும், அவருடைய முன்குறிக்கப்பட்ட எண்ணிக்கையினரைக் கூட்டிச்சேர்ப்பதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஏனென்றால், தம்முடைய ஜனங்களைச் சோதித்துப் பார்ப்பதற்காக சாத்தானை சில எல்லைகளுக்குள் செயல்பட அனுமதிப்பதற்கு அவர் தீர்மானித்திருந்தார்.

தேவனால் அறிந்துகொள்ளமுடியாத, அவருக்குத் தெரியாத சில விஷயங்கள் உள்ளன, அல்லது அவருக்கு எதுவுமே தெரியாத காரியங்கள் உள்ளன என்று நாம் சொல்வது ஞானமாக இருக்காது –ஆனாலும், நாளை அல்லது அடுத்தவாரம் நாம் என்ன சிந்திப்போம் என்பதை தேவனால் எவ்வாறு அறிந்துகொள்ளமுடிகிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை என்று நாம் கூறமுடியும். தேவன் மனிதனை ஒரு சுயாதீனமுள்ள ஜீவியாக சிருஷ்டித்தார். மேலும் இந்த சுயாதீனத்தை அவர் எப்போதும் மதிக்கிறார், அதினால் நமது சொந்த சித்தங்களை செயல்படுத்துவதற்கான வாய்ப்பையும் நமக்கு வழங்குகின்றார். இயந்திரத்தைப்போல வேலை செய்பவர்களை அடைந்திருப்பதில் அவர் பிரியப்படுவதில்லை. நம்முடைய சொந்த முடிவுகளை எடுப்பதற்கு அவர் நம்மை அனுமதிக்கிறார். அவர் தம்முடைய வார்த்தையை நமக்குக் கொடுத்திருக்கிறார், நமக்குத் தேவையான எல்லா உதவிகளையும் அவர் அருளுகின்றார், அவருடைய வழியில் நடக்க விரும்புகிற அனைவருக்கும் அவர் உதவிசெய்வார். ஆனால் இந்தக் கேள்விகள் அனைத்தும் நீண்ட காலத்திற்கு முன்பே நம்மால் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். அவருடைய ஜனம் என்று கூறிக்கொள்பவர்களை தேவன் சோதித்துப்பார்த்து, அவர்களின் இருதயப்போக்கை அவர் அறியாதவர்போல, அந்தப் போக்கை வெளிப்படுத்தியும் காண்பிக்கிறார் என்பது நமக்குத் தெரியும் – இவ்வாறு சோதித்து நிரூபிப்பது அநேகமாக தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் ஒரு ஆதாரமாக இருப்பதற்காக இருக்கலாம்.

**காரியம் என்னவாக இருக்கும் ?**

தேவன் தற்போது திருச்சபையைச் சோதித்துவருகிறார். கிறிஸ்துவின் திருச்சபை என்று தங்களைக் கூறிக்கொள்ளும் பலர், தேவனுடன் ஒருபோதும் உடன்படிக்கை செய்திருக்கவில்லை. ஆனால் அது ஒரு இருதயப்பூர்வமான அர்ப்பணிப்பாயிருக்கிறதாஇல்லையா என்று,அவர்உடன்படிக்கை செய்திருக்கிற அனைவரையும் சோதித்துவருகிறார்.அதாவது அது முதலாவது சுயமா அல்லது முதலாவது தேவனா –வாழ்க்கையில் வெற்றிபெறுவதா அல்லது தேவனுடைய கனம் மற்றும் அவருடைய சித்தத்தைச் செய்வதா என சோதித்து வருகிறார். யார் தம்முடைய குமாரனுடன் சிங்காசனத்தில் அமர்வதற்குப் பாத்திரமானவர்கள், மீதமுள்ளவர்களில் யார் நிஜமான லேவி வகுப்பாரில் இடம் பெற பாத்திரவான்கள், மற்றும் இறுதியாக, இரண்டாம் மரணத்திற்கு யார் பாத்திரமானவர்கள் என்பதைக் கண்டுபிடிக்க விரும்பி, அவர் நம்மைச் சோதித்து வருகிறார்.

ஆகவே இந்த சுவிசேஷயுகத்தில் தேவனுடைய புத்திரர்களாக இருப்பதற்கான மேலான கனம் மாத்திரமே நம்முடையதாயிராமல், நிலையான வெகுமதிகளுக்காக

சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்ட ஜீவிகளாக இருக்கும் மேலான கனமும் நமக்குரியதாயிருக்கும். தெரிந்தே தங்களுடைய நியாயப்பிரமாணத்தை மீறி வாழ்ந்த யூதர்கள் தங்கள் இம்மைக்குரிய வாழ்க்கையை மட்டுமே இழந்தனர். ஆனால் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பை அவர்கள் இழக்கவில்லை. ஆனால் நம்மில் எவரேனும் அவ்வாறு செய்தோமானால், நாம் நித்திய ஜீவனை இழந்துவிடுவோம். எனவே தேவன் நம்மைக் கையாள்வது மாம்சீக இஸ்ரயேலரை அவர் கையாண்டதற்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. அப்படியானால் நமக்கான பொறுப்பு மிகவும் பெரியதாயிருக்கிறது. அதன் பிறப்பிக்கப்படுதலும் இறுதியானதாயிருக்கிறது.

தேவனுடைய கிருபையால் இருதயத்திலும் குணலட்சணத்திலும் எஜமானரைப்போல் மாறுபவர்களுக்காக மட்டுமே இராஜ்யம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் கர்த்தரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் (தற்போதைய முழு திராணியோடும்) அன்புகூருவார்கள். மேலும் "என்னுடைய சித்தத்தின்படியல்ல, கர்த்தாவே, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று சொல்லவும் முடியும். கிறிஸ்துவுக்குள்ளாக தேவனிடத்தில் முழுமையாக ஒப்புக்கொடுத்தலைத் தவிர வேறெந்த இருதய நிலைமையாலும் நம்மை இராஜ்யத்திற்கு ஏற்புடையவர்களாக மாற்ற முடியாது. ஏனென்றால் வேறெந்த நிலைமையாலும் தேவனுக்கான முழு நேர்மையையும், முழு அன்பையும் வெளிக்காட்டமுடியாது. "கண் காணாத, காது கேளாத, மனிதருடைய இருதயத்தில் தோன்றாத" சகல பரலோக மகிமைகளும் ஆசீர்வாதங்களும், தேவன் தம்மை மிகவும் அதிகமாக அன்புகூருகிற–வர்களுக்காகவும், இந்த அன்பை நிரூபிப்போருக்காக மட்டுமே ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதை நாம் மறவாமல் இருப்போமாக. ஆனால் நம்முடைய ஒவ்வொரு தேவைக்கும் அவருடைய கிருபை போதுமானதாக இருக்கும். ஆகையால்,

சூழ்நிலை நிர்ப்பந்தத்தால் எழும் சந்தேகங்கள்,<br>
ஆம், ஒவ்வொரு சந்தேகத்தையும் நீக்க முற்படு<br>
நாம் நேசிக்கும் கானானை தெளிவடைந்த கண்களால் பார் !<br>
மோசே நின்ற இடத்திற்கு ஏறி, நிலப்பரப்பை பார்க்க முடியுமா!<br>
யோர்தான் நீரோடையோ மரணம் எனும் குளிர் வெள்ளமே,<br>
கரையிலிருந்து விரட்ட நம்மைப் பயமுறுத்த முடியாதே!

———————

**R 5528**

## தீமை பேசுதல் என்றால் என்ன ?

## WHAT IS EVIL SPEAKING ?

**"எவரையும் பழித்துரைக்கலாகாது" – தீத்து 3:2.**

நாம் ஒருவரையும் பழித்துரைக்கலாகாது என்ற அப்போஸ்தலருடைய தடைஉத்தரவு மிகவும் நேரிய சிந்தையுடையது. இவ்வாறு கூறும்போது, அப்போஸ்தலர் எதை அர்த்தப்படுத்துகிறார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. நாம் எந்த மனிதனையும் குறித்து, அவனிடத்தில் தீய உள்நோக்கம் கொண்டிருந்து, எதையும் பேசக்கூடாது என்று அவர் குறிப்பிடுகிறாரா– அல்லது உள்நோக்கம் எதுவாயிருப்பினும் தீமைபேசக்கூடாது என்று அவர் அர்த்தப்படுத்துகிறாரா ? இதற்கு பதிலுரையாக, தவறான நோக்கத்துடன், ஒரு தவறான உள்நோக்கத்துடன் தீமை பேசுவது, குறிப்பாக தேவனுடைய பிள்ளைக்கு கொடூரமான குற்றமாக இருக்கும் என நாம் நிச்சயித்திருக்கிறோம். ஆனால் உங்களுடைய நோக்கம் எதுவாயிருப்பினும், யாரைக்குறித்தும் தீமை பேசக்கூடாது என்ற பொருளிலேயே அப்போஸ்தலர் கூறுவதாக நாம் எண்ணுகிறோம். அப்போஸ்தலருடைய கருத்து அவ்வாறாக இருக்குமானால், அது சர்ச்சைக்குரியதல்ல என்று நாம் நம்புகிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோர்மீதும் இது மிகவும் கண்டிப்பான தேவையை சுமத்துகிறது. தீயனபேசுதலுக்கான நோக்கம் மோசமானதாயிருக்குமானால், அனைத்தும் மோசமானவையே ; ஆனால் நல்லதோ கெட்டதோ ஒருவனைக்குறித்தும் தீயன பேசாதே.

இப்போது தீயனபேசுதல் என்றால் என்ன என்ற மற்றொரு கேள்வி எழுகிறது. இப்பாடமானது பல்வேறு கோணங்களைக்கொண்டது என நாம் பதிலளிக்கிறோம். எது காயமேற்படுத்துகிறதோ அதைப்பேசுவது தீயனபேசுதலாகும். ஆகவே எந்த மனிதனையும் காயப்படுத்துகிற எதையும் ஒருவர் பேசக்கூடாது. பொன்னான பிரமாணத்தை நாம் பயன்படுத்துவோமானால், இந்த தேவைக்கான காரணத்தையும் நீதியையும் நம்மால் மிக எளிதாக உணர்ந்துகொள்ளமுடியும். நமக்கு யாராகிலும் தீங்குசெய்யவேண்டும் என்று விரும்புவோமா ?– நம்மைக் குறித்து சிறிதளவு பேசுவதை நாம் விரும்புவோமா ? – நம் பிழைகளை விமர்சித்தோ அல்லது பேசுபவர் எவை பிழைகளென கருதுகிறாரோ அதைக் குறித்தோ பேசி, பிறருடைய கண்களில் நாம் தாழ்வானவர்கள் என்ற எண்ணம் உருவாவதை நாம் விரும்புவோமா ?– பொன்னான பிரமாணத்தை வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் பொருந்தப்பண்ண கற்போமானால். அது நிச்சயமாக மிக உதவிகரமாகவும் இருக்கும்.

மிகவும் மனசாட்சியுள்ள கிறிஸ்தவர்கள் சிலர் இவ்வழியில் சிரமங்களைப் பெற்றிருக்கிறார்கள். தீமை பேசுவதைக்குறித்த இவ்விஷயத்தை கவனிக்கும்போது, என் நோக்கம் சரியானதா ? என்று சிலர் சிந்திக்கலாம். மற்றவர்களைப்பற்றி சிறுமைப்படுத்திப் பேசுவதில் உள்ள தங்கள் நோக்கத்திற்கும், அப்போஸ்தலரின் தடைஉத்தரவுக்கும் எந்த தொடர்புமில்லை என்பதை மறந்துவிடுகிறார்கள்.நோக்கம் என்ன என்பது ஒரு காரியமல்ல, நாம் தீமை பேசக்கூடாது. நான் நல்ல உள்நோக்கத்தை கொண்டுள்ளேனா அல்லது தீய நோக்கத்தைக் கொண்டுள்ளேனா என்பது கேள்வியல்ல. மாறாக, நாம் தீமைபேசுகிறேனா என்பதே. பிறர் என்னைக் குறித்து பேசின சிலவற்றை நான் விரும்பாததுபோல, ராஜரீகப்பிரமாணத்துக்கு எதிராக நான் ஏதாகிலும் பேசுகிறேனா ? இக்கட்டுரையை வாசிக்கிற ஒவ்வொருவரது சிந்தையிலும் இருதயங்களிலும் இக்கருத்தை நாம் புகுத்தமுடியும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

**விதிகளை மீறுவதை புகாரளிப்பது தீமை பேசுதலா ?**

இப்போது மற்றொரு கேள்வி எழுகிறது. நம் திறவுகோல் வசனத்தின் தடைஉத்தரவை, வீட்டில் அல்லது அலுவலகத்தில் எப்படி கடைப்பிடிப்பது ? நாம் ஒரு அலுவலகம் அல்லது வீட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறோம், அந்த அலுவலகம் அல்லது வீட்டின் அரசாங்கத்திற்காக சில விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன என வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட சம்பவத்தில் யாராகிலும் அந்த விதிமுறைகளை மீறுவதை, நாம் நமது பங்கில் புகாரளிப்பது தீயன பேசுதலாகுமா ? இதை தீயன பேசுதல் என நாம் கருதக்கூடாது. நாம் அந்த விதிமுறைகளை மீறுவோமானால், நம்மைக் குறித்து புகாரளிக்கும் நபர், சரியானசெயலைச் செய்கிறார், நமக்கு தீமையோஅல்லதுதவறோஅல்லதுகாயமோ ஏற்படுத்துவதில்லை. தவறான நடத்தை அல்லது விதிமுறைகளை மீறுதலுக்கு புகாரளிக்க மறுக்கும்போது, அந்த நபர் தவறான பாதையில் தொடர்ந்து நிலைத்துநிற்க உற்சாகப்படுத்துகிறவராக இருப்பார்.

தேவனுடைய பிள்ளைகள் எப்பொழுது, எந்த நடைமுறையைப் பின்பற்றினாலும், நல்ல நோக்கங்களைத்தவிர வேறு எதையும் கொண்டிருக்கமாட்டார்கள் என்று கருதப்படுகிறது. மற்றவர்களிடம் செயல்தொடர்பு கொள்ளும்போது, நல்ல நோக்கத்தைத் தவிர வேறு நோக்கங்களைக் கொண்டிருப்பாரானால், கொலைகார நோக்கத்தைப் பெற்றிருப்பதாக காணப்படும். ஆகவே நாம் நோக்கத்தை கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரு அலுவலகத்திலோ, ஒரு வீட்டிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ ஒரு ஸ்தானத்தைப் பெற்றிருக்கும் ஒரு நபர், அந்த ஸ்தானத்தோடு தொடர்புடைய பல்வேறு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்கிறார். ஒரு அலுவலகம் அல்லது வீட்டில் ஏற்படுத்தப்படும் எல்லாவிதிமுறைகளும் ஒழுங்குகளும், பெரும்பாலும் எவருக்கும் காயமேற்படுத்தும் நோக்கில் அல்ல. மாறாக, வியாபாரத்தின் அல்லது வீட்டின் பொது நலனுக்காகவே ஏற்படுத்தப்படுகிறது. இதனால் இந்த அனைத்து கடமைகளையும் கடைப்பிடிப்பது ஒரு தீவிர பொறுப்பாக கருதப்படவேண்டும். தீய வழியில் அல்ல, மாறாக உண்மையாக இருந்தால் மட்டுமே ஒருவர் விதிகளை மீறுவதாக புகாரளிக்கக்கூடாது,.

புகாரளித்தவரது இருதயத்தை நிதானிப்பது, அறிவித்த ஒருவருக்கு அவசியமற்றது. தீய இருதயமா என்பது இங்கு கேள்வியல்ல. ஒருவர் முட்டாள்தனமான மூளையைப் பெற்றிருந்தாரானால். அல்லது முக்கிய விதிகளை மீறுகிறவராகவும், கவனமற்றவராகவும் அல்லது மறதியுடையவராயுமிருந்தால், அப்படிப்பட்ட விஷயத்தில் புகாரளிப்பது இருதயத்தை நிதானிப்பதாகாது. குறிப்பாக எங்கு சட்டவிதி இருக்கிறதோ, அங்கு அப்படிப்பட்ட வழக்குகளை புகாராக அளிக்கலாம். இது கடமை அடிப்படையிலானது, அதாவது தேவைப்படுகிற ஒரு காரியம். இது முறையானதும் அவசியமானதுமாகும். நம் சரீரங்களில் தேவனுடைய வேலைத்திறனாக இந்தக் கொள்கை குறிப்பிடப்பட்டிருபபதை நாம் காண்கிறோம். சரீரத்தில் அசைவுகள் ஏதாகிலும் நிகழுமானால். உதாரணமாக ஒரு விரல் கிள்ளப்படுமானால், நரம்புகள் உடனடியாக மூளைக்கு தந்தி அளிக்கும். பாதம் காயப்படுமானால், அந்த உண்மையை மூளைக்கு உடனடியாக தந்திகொடுக்கும். ஒருவேளை சரீரத்தின் அங்கமாக இந்தக் காயத்தை மூளைக்கு சரீரம் தொடர்புபடுத்தவில்லை என்று எண்ணுவோம். அந்த செய்தியை அறிவிக்கும் உணர்வு நரம்புகள் இல்லை என்று எண்ணுவோம். அப்படியானால்., தான் இழந்துபோன ஒரு கை விரலையோ அல்லது கால்விரலையோ ஒருவனும் அறியமாட்டான். ஒருவன் இடறிவிழும்வரை, தான்பாதத்தை இழந்திருப்பதை அறிந்திருக்கமாட்டான்.

**குற்றவாளியிடம் விவாதிக்கக்கூடாத பொருள்**

நம் சொந்த தனிப்பட்ட விஷயங்கள் பாதிப்பேற்படுத்தியிருக்கிறதா என்று அதைக் காணும்படி நாம் எப்பொழுதும் நோக்கிக் கொண்டிருக்கக்கூடாது. மற்றவர்களைப்போல் நாமும் அபூரணங்களை பெற்றிருப்பதை நாம் அறிவோம். நம் கால்விரல்களை மற்றவர்கள் கவனக்குறைவாக மிதித்துவிட்டார்களானால், நாமும் சிலவேளைகளில் மற்றவர்களுடைய கால்விரல்களை மிதித்திருப்போம் என்று நாம் அறிவோம். ஆனால் குடும்பத்திற்குரியவை மற்றும் அலுவலகத்திற்குரியவை–களிலிருந்து நம் தனிப்பட்ட விஷயங்கள் வேறுபட்டுள்ளன. அலுவலகம் மற்றும் வீட்டின் விதிமுறைகளை மீறுவதை புகாரளிப்பது அந்நிய காரியங்களில் தலையிடுவதாகாது. குடும்பத்தின் ஒவ்வொரு அங்கம் அல்லது ஒரு நிறுவனத்தின் ஒவ்வொரு உறுப்பினரது நலன்களைக் குறித்து முறையாகவும், நியாயமான வழியிலும் முழு சரீரத்தின் நலன்களை கவனித்துப் பார்ப்பதாகும்.

ஒரு அலுவலகத்திலுள்ள அனைவரையும் நேர்நெறிக்கு கொண்டுவர எவரேனும் முயற்சிப்பது முறையானதாக இருக்காது. சுற்றிலும் சென்று மற்றவர்களை திருத்துவது எவருக்கும் உரியதல்ல, இது அவருடைய தொழில் அல்ல. ஆனால் மற்றவர் விதிமுறைகளை மீறுவாரேயானால், அந்த உண்மைகளுக்கு மேற்பூச்சு பூசாமல், உண்மைகளை மட்டும் புகாரளிப்பது அவருடைய அலுவலாயிருக்கிறது. நாம் வேறுவிதமாக செய்வோமானால், அதாவது, மீறுதல் நடந்ததை கவனித்த ஒவ்வொருவரும் விதிகளை மீறியவரிடம் சென்று, அலுவலகத்தின் அல்லது வீட்டின் எல்லா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முயற்சி செய்வார்களானால், அங்கே தொடர்ச்சியாக குழப்பம் நிலவும். சட்டவிதியை மீறினவர் ; ''என் வழிமுறை சரியானதாயிருந்தது, அந்த வாயிற்கதவு திறந்திருந்ததா அல்லது மூடப்பட்டிருந்ததா என்பது உங்கள் விவகாரம் அல்ல'' என்று தன்னைக் காத்துக்கொள்ள முனைந்தவராய் கூறுவார். ஆனால் அந்த வாசற்கதவு திறந்திருக்குமானால், உரிய அதிகாரியிடம் அவ்விஷயத்தைக் குறித்து புகாரளிப்பது உங்களது கடமை. இவ்வாறு அந்த விவகாரத்தின் கடமையிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள். மத்தேயு 18 :15–17ன்படி கையாளப்படவேண்டிய , தனிப்பட்ட சொந்த காரியம் அல்ல. இவ்விஷயங்களைப்பற்றி டாம், டிக், ஹேரி, மேரி அல்லது ஜோன்சுக்கு கூறுவது நம் கடமையாக இருக்கக்கூடாது. ஒரு நபரிடம் மட்டுமே நாம் அதைக் கூறவேண்டும். அந்த புகாரளித்தலும் உதவும் உணர்விலேயே செய்யப்படவேண்டும்.

ஒருவர் முழு வீட்டையும் அல்லது அலுவலகத்தையும் இயக்க முயற்சித்து, எல்லோரிடத்திலும் சென்று அவர்களை சரியாக சீரமைக்க முயற்சிப்பாராகில், விரைவில் அவர் துன்பத்துக்குள் தானாக அகப்பட்டுக்கொள்கிறார். ஆனால் அங்கே புதிதாக வந்த ஒருவர் உள்ளோக்கமின்றி விதிமுறையை மீறியிருப்பாரானால், அவரிடம் ; இந்த வீட்டின் விதிமுறைப்படி இவ்வாறு செய்யவேண்டும் என்று கூறுவது நல்லது. ஆனால் இந்த உண்மையை ஒரு தடவைக்கு மேல் குறிப்பிடுவது சரியானதல்ல.

இரண்டாம் முறை மீறுதல் நடக்கும்போது, அன்பின் ஆவியில் புகாரளிக்கப்படவேண்டும்.

**பலதரப்பட்ட வழக்குகள்**

சபையில் இக்கேள்வியை நம் சரியான வழிமுறைக்கு பொருந்தச்செய்து, நமக்கான தனிப்பட்ட விஷயங்களோடு தொடர்புபடுத்தும்போது, நம் தனிப்பட்ட பொறுப்பு எங்கே இருக்கிறது என்று நாம் காண்கிறோம். "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம் செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து". இங்கு நம் கர்த்தர், பிறருக்கு எதிராக அவன் என்ன செய்தான் என்று இங்கு குறிப்பிடவில்லை, மாறாக, "உனக்கு விரோதமாக" என்றே கூறுகிறார். "நல்லது, அவர் குறிப்பிட்ட நபருக்கு எதிராக சில காரியங்களைச் செய்தார் என்று சிலர் ஆட்சேபிக்கக்கூடும்"."இந்த சகோதரன் தன் மனைவியை சரியாக நடத்துவதில்லை" என்று ஒருவர் கூறினதை நாங்கள் கேட்டோம். அது அந்த சகோதரனுடைய வேலை, மற்றும் அவரது மனைவியின் வேலை, இது உங்கள் வேலையல்ல, உங்கள் மனைவி அல்லது கணவரை, உங்கள் சொந்த பெற்றோரை, உங்கள் சொந்த குழந்தைகளை சரியாக கவனிப்பதே உங்கள் பணி, மற்ற ஜனங்களை விட்டுவிடுங்கள். நீங்கள் உங்களுடைய பணியைச் செய்யுங்கள் என்று நாங்கள் புத்திமதி கூறுகிறோம். உங்கள் சொந்த நடவடிக்கைகளுக்குரிய உங்கள் கடமையைச் செய்யுங்கள், மற்ற நபர்களது கருத்துக்களை தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று நாங்கள் பதிலளிக்கிறோம்.

ஆனால் ஒருவேளை, தீவிரமான தவறு ஏதாகிலும் நாம் காணநேரிடும். உதாரணமாக, வீதியில் நாம் சென்று கொண்டிருக்கும்போது, ஒரு மனிதன் ஒரு குதிரையை கொடூரமாக அடிப்பதைக் காணும்போது. நாம் எதுவும் பேசக்கூடாதா? அப்படிப்பட்ட விஷயத்தில், நாம் ஒரு போலீஸ்காரரைக் கண்டால், அவரிடம் ; "அந்த குதிரையை அந்த மனிதன் எவ்வளவு கொடுமைப்படுத்துகிறான், நீங்கள் கவனித்தீர்களா?" என்று கேட்கலாம். அல்லது அருகில் மனித உரிமை சங்கம் இருக்குமானால் புகாரளிக்கலாம். பெற்றோர் ஒரு குழந்தையை கொடூரமாக அடித்தார்களானால் அல்லது அம்மாதிரியான சில காரியங்களில், அதிகாரிகளிடத்தில் விஷயத்தைத் தெரிவிக்கலாம். ஆனால் சுற்றிலுமுள்ள பொதுவான விஷயங்களை சரிசெய்ய முயற்சிப்பது ஒவ்வொருவருடைய பணியல்ல. உலகம் தீமையினால் நிறைந்துள்ளது, தேவ இராஜ்யம் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும்வரை அவ்வாறே இருக்கும்.

சபையைப் பொருத்தவரை,. உலகில் நாம் காணும் அநேக சிரமங்கள், ஒரு சட்டமாகவே அப்படியே விடப்படுவது நலம் பயக்கும் என்று நாம் காண்கிறோம். ஒவ்வொன்றையும் சரிப்படுத்த நாம் துவங்குவோமானால், அது தவறாயிருக்கும். ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவருக்கு ஊழியம்செய்ய நமக்கு நேரம் மீதம் இருக்காது. நமக்கான நேரம் குறைவாகவே உள்ளது, அது சிறந்தது. ஜனங்கள் ஏற்கனவே நம்மைத் தவறாக நிதானிக்கிறார்கள். ஆகவே எதிர்த்தரப்புக்கு வலுசேர்க்கிறவர்களாக இராமல், நாம் சிறப்பாக செய்வோமாக. நாம் சபைக்கும், நம் குடும்பத்திற்குமான நம் எல்லா கடமைகளையும் செய்வதன் மத்தியில், நேரம் ஏதாகிலும் கிடைக்குமானால், அப்பொழுது இந்த வெளிப்புறக் காரியங்கள் சிலவற்றை நாம் பார்க்கலாம். ஆனால் நமக்கு கொஞ்சகாலமே உள்ளது. நம் அத்தியாவசியமான கடமைகள், கர்த்தரிடத்திலான நம் ஊழியத்தை, சகோதரருக்கான நம் ஊழியத்தைத் தவிர, மற்ற எந்தக் காரியங்களிலும் ஈடுபட, மிக சிறு வாய்ப்பையே இது நமக்கு விட்டுத்தருகிறது. இதற்காக நாம் மிகவும் நன்றியுள்ளோராய் இருக்கவேண்டும். அப்போது நமக்கெதிராக எதிர்ப்புக்கள் இருக்குமானால்,அது நம் பரலோகராஜாவுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருப்பதன் காரணத்தினாலேயே இருக்கும்.

உலகின் காரியங்களை சீராக்குவதற்கு நம் ராஜா நமக்கு இன்னும் அதிகாரம் அளிக்கவில்லை. ஆனால் நமக்கு கிடைக்கும் சந்தப்பத்திற்கேற்ப, எந்த சர்ச்சைக்குள்ளும் செல்லாமல், நீதியின் கொள்கைகளை அறியப்பண்ணவேண்டும் என்று நாம் அறிவுறுத்தப்படுகிறோம். நம் ராஜா வந்திருந்து, தம் ஆளுகையைத் துவங்கும்போது, நாம் அவரோடுகூட உயர்த்தப்பட்டு, ஒரு அரசாங்கம் எப்படி இருக்கவேண்டும் என்பதை உலகிற்கு நாம் காண்பிப்போம். ஆனால் மெய்யாகவே, சட்டங்கள் தற்போதும்கூட எவ்வளவு நன்மையளிப்பதாய் இருக்கின்றன என்பது ஆச்சரியமளிக்கிறது!. உதாரணமாக, நியூயார்க் மாகாணத்தின் நல்ல சட்டங்களை நினைத்து வியப்படைகிறோம். பெரும்பான்மையோரது நலன்களில் அந்த மாகாணம் எந்தளவு அக்கறை எடுக்க முயற்சிக்கிறது, ஜனங்களுக்காக எந்தளவு செய்கிறது என்பது அற்புதம்! ஏழை உலகம் இவ்வளவு சிறப்பாக செய்ய முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலைகளில் அவர்கள் செய்திருப்பதைக் கண்டு நாங்கள் பாராட்டுகிறோம். நீதியின் சட்டத்தின்கீழ் அனைத்தும் இருக்கும்போது, எப்பேர்ப்பட்ட சிறப்பான நேரமாக அது இருக்கும்! எப்பேர்ப்பட்ட சிறந்த உலகமாக அது இருக்கப்போகிறது!

**கேள்வியின் மறுபக்கம்**

சபையில் தீமை பேசுதலைக்குறித்த இந்த விஷயத்திற்கு மீண்டும் வருவோம். மூப்பர் அல்லது உதவிக்காரருக்காக ஒரு சகோதரர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் சபையிலுள்ள மற்றவர்களால் அறியப்படாத நிலையில், நாம் அறிந்த குறிப்பிட்ட காரணங்களின்பொருட்டு, நம் நிதானிப்பின்படி அவர் அப்படிப்பட்ட அலுவலுக்கு தகுதியற்றவர் என்று வைத்துக் கொள்வோம். இவ்விஷயத்தில் நம் வழிமுறை என்னவாக இருக்கவேண்டும்? எந்த மனிதனையும் குறித்து தீயனபேசவேண்டாம் என்று நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். நாம் எழுந்து நின்று, "சகோதரரே, A என்கிற சகோதரர் மூப்பராயிருப்பதற்கு முற்றிலும் தகுதியற்றவரென நான் எண்ணுகிறேன் ; அதன்படி, அவர் ஸ்திரீயிடம் குறிப்பிட்ட ஒரு தொகையை ஏமாற்றியிருக்கிறார் என்று நான் அறிவேன்", அல்லது எந்தக் குற்றமாக இருந்தாலும் இப்படி நாம் கேட்கலாமா? இதை நாம் கூறலாமா?கூறக்கூடாது, நிச்சயமாகக் கூடாது. சபையின் நலன்களுக்காக தீமை பேசுவது நம் கடமையா? நன்மை வரும்படியாக தீமை செய்யலாமா? நிச்சயமாக செய்யக்கூடாது. பழைய சிருஷ்டி தீமைபேசுவதற்கான வாய்ப்பை எப்பொழுதும் எதிர்பார்க்கிறது ; அவனுக்கு அரைவாய்ப்பை கொடுத்தால் தனக்குத்தெரிந்த அனைத்தையும் விரைவில் கூறுவான்.

அப்படியானால் நாம் என்ன செய்வது? நாம் அந்த சபையில் உறுப்பினர்களாக இருப்போமானால், அவ்வாறு முன்மொழியப்பட்டிருக்கிற சகோதரரிடம் சென்று பேசலாம் ; "சகோதரர் A அவர்களே, உங்களைக்குறித்து நான் சில குறிப்பிட்ட விஷயங்களை அறிந்திருக்கிறேன், அதை யாரிடமும்

அறிவிக்க நாம் விரும்பவில்லை. அன்பு சகோதரரே, உங்களைக்குறித்து தீயன பேச நான் ஒருபோதும் விரும்பவில்லை. ஆனால் உங்கள் ஜீவியத்தின் இந்த அம்சம் தவறானது, இதனால் இந்த சபைக்காக உங்களை தேர்ந்தெடுப்பது சரியானதாயிருக்காது என்று நான் நம்புகிறேன். இக்காரியத்தை அவர்களிடம் அறிவிக்க நான் விரும்பவில்லை. நீங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை நிராகரிப்பதாக நீங்கள் வாக்குறுதி அளித்தால், அதுவே அவசியமானது. அல்லது என் கருத்து சிறந்ததாக நீங்கள் எண்ணாவிடில், அவ்விஷயத்தை அவர்களிடம் வெளிப்படையாக கூறிவிடுங்கள். இதை நீங்கள் செய்யாமலும், தேர்ந்தெடுப்பதை மறுக்காமலுமிருந்தால் பின்பு நான் பகிரங்கமாக சொல்ல நேரிடும் – எனக்குத் தெரிந்ததை நான் சொல்வேன், ஏனெனில் நான் கூறுவதை நீங்களும் அறிவீர்கள். உங்களுக்கு காயமேற்படுத்தும் விருப்பம் எனக்கு இல்லை, உங்களுக்கு கருணை காட்டவே உங்களிடத்தில் வந்திருக்கிறேன்'' என்று சொல்லலாம் என நினைக்கிறோம்.

இதற்கு அந்த சகோதரன், ‘‘சகோதரரே, நல்லது, நான் முன்மொழியப்பட்டதை நிராகரிப்பேன், நீங்கள் குறிப்பிட்ட இந்த விஷயத்தின்பொருட்டு, அப்போது நான் அதை சிறப்பாகப்பெற முயற்சிக்கிறேன்'' என்று பதிலளித்தால், நாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அவரிடத்தில் கூறவேண்டும். இந்த வழியில் அந்த சகோதரனுக்கு நன்மை செய்யலாம் என நாங்கள் நம்புகிறோம். மேலும் நம் சபைக்கு எது தீங்கு ஏற்படுத்துமோ அல்லது எவை சர்ச்சைக்குரியவைகளோ அவைகளிலிருந்து நாம் பாதுகாப்போம், மற்றும் சமாதானத்தைக் காப்போம். மறுபுறத்தில், அந்த சகோதரன் சர்ச்சைக்குரியவராக இருந்தால் நாங்கள் அவருக்குச் சொல்வோம், ‘‘நீங்கள் தேர்ந்தெடுத்தலை நிராகரிக்கவில்லையெனில், நான் இந்த விஷயத்தை சபையில் விளக்குவேன் என்று நீங்கள் உறுதியாய் நம்பலாம். இதன்மூலம் வாழ்க்கையில் உங்கள் செயல்முறையை நீங்கள் அங்கீகரிப்–பதாகவும், அதில் நிலைநிற்பதாகவும் கூறுகிறீர்கள்'' எனலாம்.

ஆனால் அந்த சகோதரனுடைய வாழ்க்கையில், இந்த விஷயம் நீண்டகாலத்துக்கு முன்பாக நிகழ்ந்திருப்பின், தற்போது, ஒரு வருடத்திலோ அல்லது இரண்டு வருடங்களிலோ அல்லது 5 வருடங்களிலோ அவர் முற்றிலும் மாறியிருக்கக் கூடும். அவருடைய பழைய போக்கிலிருந்து மாறியிருப்பாரானால், நாங்கள் மகிழ்ச்சியடைவோம். ஆகவே நாம் அந்த சகோதரனிடத்திற்குச் சென்று கூறலாம் ; ‘‘சகோதரரே, நீங்கள் தேர்ந்தெடுப்பில் நிற்பதை நான் கவனித்தேன். உங்கள் வாழ்க்கை முற்றிலும் மாறியிருக்கிறதா ? ‘‘ஆம் சகோதரரே, முற்றிலும் மாறியிருக்கிறது'' என்று அவர் பதிலுரைத்தாரானால், நாம் மகிழ்ச்சி கொள்ளலாம். ஆனால் அவர் கோபங்கொண்டு, இது உங்கள் வேலையல்ல என்பாராகில், ‘‘சகோதரரே, இப்போது சபைக்கு இதைக்குறித்து நான் எடுத்துரைக்கவேண்டும். நீங்கள் முன்பு எடுத்த அதே போக்கை ஆதரித்துப்பேசுவதாக உங்கள் நடக்கையின்மூலம் அறிவுறுத்துகிறீர்கள். நான் தவறான செயலை செய்திருந்தேனாகில், தொடர்ந்து தவறுசெய்தால், நான் என் நடைமுறையை சரிபார்க்க விரும்புகிறேன். ஆகவே இந்த விஷயத்தை நான் சபைக்கு சமர்ப்பித்து, உங்களை மூப்பராக(அல்லது உதவிக்காரராக) மீண்டும் ஏற்றுக் கொள்கிறார்களா, இல்லையா என்பதை அவர்கள் தீர்மானிக்கட்டும். ஆனால், அந்த சகோதரன் சபையிலுள்ள அலுவலுக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று வைத்துக்கொள்வோம், பின்பு. அவரது கடந்தகால நடைமுறை என்பது நம் அலுவல் அல்ல என்று நாம் கருதுவோமாக.

**முடிவுரையாக ஒரு புத்திமதி**

பிறருடைய நிஜமான நலன்களுக்கு காயமேற்படுத்தும் எவற்றையும் ஒருக்காலும் பேசலாகாது. அதேசமயம். பிறரைக்குறித்த நம் வார்த்தைகளில் நாம் மிகவும் கவனமாக இருக்கமுடியாது. கர்த்தருடைய பிள்ளைகளில் சிலரிடத்தில் மற்ற சகோதரர்களுடைய நம்பிக்கைகளில் திருப்திப்படுத்தும் மனப்பான்மை காணப்படுகிறது. நிகழ்வுகளை மற்ற சகோதரர் அல்லது சகோதரி மீது பிரதிபலிக்கும் மனப்பான்மை காணப்படுகிறது. இது அவருக்குள் உள்ள பலவீனத்தின் குறிப்பிட்ட வெளிப்பாடுகளை காண்பிக்கும். அந்த சகோதரரின் அபூரணங்களை அம்பலப்படுத்தும் இந்த மனநிலை நிச்சயமாக அன்பாக இருக்காது(1பேதுரு4 :8). இந்த குறுகலான வழியில், நீண்டகாலமாக இருக்கின்ற சிலர், இந்த மனப்பான்மையை இன்னும் வெல்லமுடியாதிருப்பதை நாம் காணமுடிகிறது. அவர்கள் சகோதரனையோ அல்லது சகோதரியையோ குற்றம் கண்டு தீர்ப்பிடும்போது. தங்களிடத்திலேயே பெலவீனங்கள் இருப்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்களா ? அவர்கள் அபிவிருத்தியடைவதில் சொந்த குறைபாடுள்ளதை நம் திறவுவசனம் நிரூபிப்பதோடு, இதே வழிகளில் நம் போதகர் கூறும் அறிவுரையையும் அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள். தீமை பேசுவதினால் குற்றவாளிகள் என்ற தாக்கமானது இவர்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணக்கூடும்.

இவையனைத்தும் அவதூறுகளே என்று கிறிஸ்துவின் பின்னடியார் ஒவ்வொருவரும் விரைவில் காணநேரிடும். இவை ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் நற்பெயரை இழிவுபடுத்துதலே, இது தேவவசனம் திரும்பத்திரும்ப வலியுறுத்தும் கட்டளைகளை நேரடியாக மீறுவதாகும், அவதூறு என்பது வேறுஒருவரின் நற்பெயரைத் திருடுவதாகும் என்று விரைவில் காணநேரிடும். இந்தப் பாடத்தை எவ்வளவு சீக்கிரம் அவர்கள் அதன் அனைத்து அருவருப்பான தன்மையிலும் பார்க்கிறார்களோ, அது கர்த்தரின் பார்வையில் தோன்றுவது–போல் எண்ணுவார்கள். ஒரே உண்மைத் தரநிலையாகிய தெய்வீக தரநிலையிலிருந்து இவ்விஷயம் காணப்பட்டவுடன் தேவனுடைய பிள்ளை விழித்துக்கொண்டு, கூடுமானவரை மிகப்பெரும் ஆற்றலைப் பிரயோகித்து. மாம்சம் மற்றும் சாத்தானின் இப்படிப்பட்ட கிரியைகளை ஜெயிக்கவேண்டும். ஆகவே இந்த வார்த்தைகளை வாசிக்கிற ஒவ்வொருவரும், தன் சொந்த இருதயத்தை ஆராய்ந்தறிந்து, தன் சொந்த நடக்கையைக் குறித்து சிந்தித்து, அதன்பிறகு, ‘‘இது நானா ?'' என்ற கேள்வியைக் கேட்கட்டும்.

விரைவில் வரவிருக்கும் ராஜ்யத்தின் ஸ்தானத்துக்கு தகுதியுடையோராக தங்களை நம்பிக்கையோடு எண்ணுகிற ஒவ்வொருவரும் தீமை, பொறாமை, புறங்கூறுதல், சண்டை ஆகிய பழைய புளித்த மாவை களைந்துபோடக்கடவர். யாராகிலும் இன்னும் எஞ்சியிருப்பார்களானால், அவரோ அல்லது அவளோ, தேவனுடைய நேசகுமாரனின் சாயலை அடையலாம். மாம்சம் மிகவும் வஞ்சனைக்குரியது. மேலும் சாக்குப்போக்குகளை எல்லாவகையிலும் எடுத்துக்கொள்ள சாய்கிறது. ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட இருதயத்தை ஆராய்ந்தறியும் விஷயமாக இதை எண்ணக்கடவர். நம் குணாதிசயங்களை பூரணப்படுத்துவதற்கு சிறிதுகாலம் மட்டுமே மீதியாயிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆகவே ‘‘கர்த்தாவே, என் இருதயத்துக்குக் காவல் வையும் ; என் உதடுகளின் கதவைக் காத்துக்கொள்ளும்'' என்று முன்பைக்காட்டிலும் மிக ஊக்கமாய் ஜெபிப்போமாக !

---------

**R 5532**

# ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதிருக்கட்டும்

# "LET NO ONE TAKE THY CROWN"

**"...சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" – வெளிப்படுத்தல் 3:11.**

இந்தப் பாடத்தின் ஆதார வசனமானது, இயேசு தாமே உரைத்திட்ட தீர்க்கதரிசனமாக இருக்கின்றது. தம்முடைய சபையின் ஏழு காலகட்டங்களையும் குறித்து அடையாளமாகக் கூறும்போது, எஜமானர் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி, அந்த ஏழு சபைகளில் ஒன்றுக்கு உரையாற்றுகின்றார். இருப்பினும், கர்த்தருடைய ஆலோசனைகள் அனைத்தும், எக்காலத்திலும் பொருந்தும் தன்மையுள்ளது. எனவே இப்போதுள்ள நாமும், இது யாருக்கு குறிப்பாகக் கொடுக்கப்பட்டதோ அவர்களும், நம் ஆதார வசனத்தின் அறிவுறுத்தலைக் காணலாம்.

பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகைக்கு, தேவன் ஏற்பாடு செய்திருந்ததைத் தவிர வேறு எந்தப் பரிகாரமும் இருக்கமுடியாது. இது மீட்பருடைய இரண்டாம் வருகையில், அவர் தம்முடைய இராஜ்யத்தை நிறுவும்போது பயன்படுத்தப்படும் என்று முழு வேதாகமத்துக்கும் இசைவாக போதிக்கின்றது. இதற்கிடையில், "உம்முடைய இராஜ்யம் வருவதாக ; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்கிற நம்முடைய ஜெபத்திற்கான நிறைவேறுதல் தாமதமாவது, உலகம் மற்றும் அதன் பயங்கரமான பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையைப் பொருத்தவரையில், பிதாவும் மீட்பரும் தங்களுடைய பங்கை ஆற்றுவதில் கவனக்குறைவாக இருக்கின்றனர் என்பதை அர்த்தப்படுத்தாது. மாறாக, தேவனும் நம் எஜமானரும் பெரும் அமைதியோடு இருக்கிறார்கள் என்பதை இதுஅறிவுறுத்துகிறது. தேவனுடைய திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும், அது உலகம் முழுவதற்கும் இறுதியில் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்பதையும், ஆபிரகாமின் நாட்களில் துவங்கி, தேவன் வாக்களித்த பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

மேசியாவின் இராஜ்யத்தில் பயன்படுத்தப்படப்போகிற வல்லமையைக் கருத்தில் கொண்டு, பாவமும் மரணமும் ஆளுகைசெய்யும் மாபெரும் ஆறு நாட்களை எவ்வாறு ஞானமாக அனுமதிக்கலாம் என்பதை தேவன் ஆரம்பத்திலிருந்தே முன்னறிந்துள்ளார். பாவம், துக்கம், வலி, மரணம் என இப்போது மனுக்குலத்தை தொந்தரவு செய்யும் அனைத்தையும் சமாளிப்பதற்கு, மேசியாவானவர் தெய்வீக வல்லமையின் ஆதரவுடன் மிகவும் வல்லவராய் இருப்பார். பிதாவால் நியமிக்கப்பட்ட காலமாகிய ஆயிரமாண்டுகள் போதுமானளவுக்கு நீண்டதாக இருக்கும். ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும், அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்திரராகவும் திருச்சபை உலகத்திலிருந்து மணவாட்டியாக தெரிந்துகொள்ளப்பட்ட பிறகு, மனுக்குலத்துக்கான திரும்பக்கொடுத்தல், மறுசீரமைப்பு, உயிர்த்தெழுதல், மறுபிறப்பு எனும் ஆசீர்வதிக்கப்பட்ட வேலைக்கு சகலமும் ஆயத்தமாக இருக்கும் – அதாவது, ஆதாம் பாவம்செய்ததன் மூலமாக இழந்துபோனதை, மரணபரியந்தம், இழிவான சிலுவையின் மரணபரியந்தம் கிறிஸ்து காண்பித்த மனப்பூர்வமான கீழ்ப்படிதலின் மூலமாக ஆதாயமாக்கின, சிருஷ்டிகருடைய சாயலுக்கும் ரூபத்துக்கும், மனவிருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களைக் கொண்டுவரும் ஆசீர்வதிக்கப்பட்ட வேலைக்கு, சகலமும் ஆயத்தமாக இருக்கும்.

**சபையை ஊக்குவித்தல்**

நமது ஆதார வசனம் உலகத்திற்கோ, பெயரளவிலுள்ள சபைக்கோ அல்ல, மாறாக உண்மையான திருச்சபைக்கு முகவரியிடப்பட்டுள்ளது. உண்மையான திருச்சபையார் பாவத்திலிருந்து விலகி, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்கள் இருதயங்களை தேவனுக்குக் கொடுத்திருந்து, கிறிஸ்துவின் மூலமாக பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். மேலும் அப்போஸ்தலர் கூறுவதுபோல் ; நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே; தேவனுடைய சுதந்திரரும், (நம் கர்த்தராகிய) கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரருமாக"இருக்கிறார்கள்(ரோமர் 8 :17). இவ்வாறு பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியே மகிமையின் கிரீடம் வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் ஒவ்வொருவருடைய பெயரும் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தேவனைப் பொறுத்தவரையில், முழு விஷயமும் உறுதியாக முடிவுசெய்யப்பட்டாயிற்று. ஆனால் திருச்சபையைப் பொறுத்தவரையிலோ, அவர்கள் தங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக இன்னமும் விடப்பட்டிருக்கிறது. கிறிஸ்து மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தங்கள் சரீரத்தை, தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தபிறகு, அவர்கள் அந்த மனப்பான்மையிலேயே தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டும் –நாளுக்கு நாள் மகிழ்ச்சியுடன் தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்து, மனதார சகித்து, துன்புற்று, தேவன் அவர்களைக்குறித்து மகிழ்ச்சியடையும் வகையில், எதுவாகவும், அனைத்துமாகவும் இருக்கவேண்டும். இதைச் செய்கிற அனைவரும் கர்த்தராகிய இயேசுவினுடைய குணலட்சண சாயலில் தொடர்ந்து வளர்கிறார்கள். மேலும் இப்படிப்பட்டவர்கள், இவையனைத்தின் மூலமாக தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிசெய்வார்கள்.

ஆனால் இவர்களில் யாரேனும் இந்த பலியினால் செய்த உடன்படிக்கையைப் புறக்கணித்து, மரண பயத்தின்மூலம் பாவத்திற்கோ அல்லது சபைப்பிரிவின் பிழைகளுக்கோ கீழ்ப்பட்டிருக்க நேரிட்டால், அல்லது வேறு எந்த வகையிலாவது தங்கள் உடன்படிக்கையின் பொறுப்புக்களில் நேர்மையாக இருப்பதற்குத் தவறினால், அவர்கள் தங்கள் தெரிந்துகொள்ளுதலைப் தக்கவைக்கவும், உறுதிசெய்யவும் தவறிவிடுவார்கள். பரீட்சையின் காலத்துக்குப்பிறகு, அவர்கள்

இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்படுவார்கள். அவர்கள் லேவியர்களாக, ஆசாரியர்களுக்கு ஊழியர்களாக தங்கள் நிலைப்பாட்டை இன்னும் தக்கவைத்துக்கொள்ளலாம் என்றாலும், அவர்கள் இனியும் இராஜரீக ஆசாரியக்கூட்டத்தாரில் ஒரு பகுதியாகக் கருதப்பட மாட்டார்கள்.

இதுவே ஆதார வசனத்தின் கருத்தாகும். அதாவது, திடமனதாயிருங்கள். நான் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வதற்கு அதிக நேரம் ஆகாது. இராஜ்யம் மற்றும் அதனோடு தொடர்புடைய தெய்வீக ஆசீர்வாதத்தைப் பற்றிய சிந்தனையானது, உங்களை உற்சாகப்படுத்தி, பலப்படுத்தி, தேற்றுதல் அளிப்பதாக. மேலும்தேவசித்தத்தைஉண்மையாகவும், நேரிய உள்ளத்தோடும், தைரியமாகவும், உண்மைத்தன்மை–யோடும் செய்வதற்கு உங்களைப் பலப்படுத்துவதாக. "உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு". என்னோடு மரித்து, என்னோடு துன்புறுவதற்கும், பூமிக்குரிய எல்லா இலட்சியங்களையும் கைவிடுவதற்கும், என் இராஜ்யத்தில் உடன் சுதந்திரராகுதல் என, நான் உங்கள் முன் வைத்திருக்கும் மாபெரும் பரிசுக்காக அநுதினமும் போராடுவதற்கும், நீங்கள் செய்த உடன்படிக்கையின் அடிப்படையில் நான் உங்களை ஏற்றுக்கொண்டபோது, உங்கள் குருவாகிய நான் உங்களுக்காக ஏற்படுத்திய ஆசீர்வதிக்கப்பட்ட உறவை உங்களிடமிருந்து நழுவ இடங்கொடுக்காதீர்கள்.

உன்னுடைய பரிந்துபேசுபவராக நான் உனக்காக வைத்திருக்கும் ஏற்பாட்டினாலும், நீ என்னுடன் செய்துகொண்ட பலியினாலான உடன்படிக்கையினாலும், கிரீடம் இப்போது உன்னுடையதாய் இருக்கிறது. உன்னுடைய கிரீடத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிரு! அதை இன்னொருவருக்கு கடந்துசெல்ல அனுமதியாதே. உங்களில் எவரேனும் உண்மையற்றவர்களாக இருந்தால், அந்த இராஜ்யத்தில் பங்கடைவதற்கு தேவன் உங்களை அனுமதிக்கமாட்டார். ஆனால் உங்களுடைய பெயருக்குப் பதிலாகவேறொருவருடைய பெயரைச் சேர்ப்பார், புதிய உடன்படிக்கையாளராக உங்கள் பெயருக்குப் பதிலாக வேறு பெயரைச் சேர்த்துக்கொள்வார்.

**தெரிந்துகொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை**

திருச்சபையானது, ஒன்றுகூடவோ, குறையவோ என்றில்லாமல், ஒரு திட்டவட்டமான, நிலையான எண்ணிக்கை உடையதாக இருக்கவேண்டும் என்பதை, மற்றவற்றுடனேகூட, இந்த வேதவாக்கியமும் நமக்கு உறுதியாகக் காட்டுகிறது. இது யூதருடைய பிரதான ஆசாரியனின் சரீரத்திலும் விளக்கப்பட்டுள்ளது. ஆசாரியருடைய தலை இயேசுவை அடையாளப்படுத்தியது ; ஆசாரியருடைய சரீரம் திருச்சபையை அடையாளப்படுத்தியது. அப்போஸ்தலர் சொல்வதுபோல், "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும். தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்". "எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் ; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார் ". "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" "அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே" – 1கொரிந்12 : 27,12,18,20.

நியாயப்பிரமாணத்தின்படி, கைவிரல்கள் கால்விரல்கள் என அனைத்து அங்கமும் முழு எண்ணிக்கையில் காணப்பட்டாலொழிய, ஒருவரும் பிரதான ஆசாரியர் ஸ்தானத்தில் பணியாற்றமுடியாது(லேவியராகமம்21 :17–21). ஒரு கூடுதலான கைவிரல், கூடுதலான கால்விரல் போன்று, கூடுதலான அங்கமுடைய எவராலும் ஊழியஞ்செய்ய முடியாது. இவ்வாறாக, நிஜமான ஆசாரியக்கூட்டமாகிய கிறிஸ்துவின் முழுமையை கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில், நிஜமான இராஜரீக ஆசாரியக்கூட்டம் பற்றிய ஒரு சித்திரம் நமக்குக் கிடைக்கின்றது. அந்த சித்திரத்தை பின்தொடர்ந்து பார்க்கும்போது, லேவியர் வகுப்பாரின் நிஜத்தை நாம் பெறுகிறோம். முதலாவது வகுப்பார், இஸ்ரயேலின் ஒவ்வொரு கோத்திரத்துக்கும் பன்னிரண்டு ஆயிரம் என மொத்தம் 1,44,000 எனும் ஒரு திட்டவட்டமான எண்ணிக்கையைக் காட்டுகிறது. இவ்வாறாக தேவன், தாம் ஒரு திட்டவட்டமான நோக்கத்தைப் பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டுகிறார். இந்த இராஜரீக ஆசாரியக்கூட்டமாக இருப்பதற்காக இஸ்ரயேலரே முதலில் அழைக்கப்பட்டனர்(யாத்19 : 5,6). பெந்தெகொஸ்தே நாளன்று, பல்வேறு கோத்திரங்களிலிருந்து சிலர் மாத்திரம் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, திருச்சபையின் கருவாக அல்லது ஆரம்பக்கால உறுப்பினர்களாக ஆயினர். அதன்பிறகு புறஜாதிகளுக்கு வாய்ப்பின் கதவு திறக்கப்பட்டது. இப்படியாக உள்ளே வரும் அனைவரும் பன்னிரெண்டு கோத்திரங்களில் காலியாக இருக்கும் இடங்களை நிரப்புவதற்காக வைக்கப்படுகின்றனர். இதனையே அப்.பவுல் ரோமர் 11ம் அதிகாரத்தில் – அவிசுவாசத்தின் காரணமாக ஒடிந்துபோன சுபாவக்கிளைகளின் இடங்களைப் பிடிப்பதற்காக, ஒலிவ மரத்தில் காட்டு ஒலிவக்கிளைகள் ஒட்டவைக்கப்படுகின்றன என்று சித்தரிக்கிறார்.

கர்த்தருக்கு நேர்மையாக இருந்தாலும், மணவாட்டி வகுப்பாரில் ஒருவராக இருப்பதற்கு போதுமான நேர்மை இல்லாதோருடைய நேர்மை பரீட்சிக்கப்பட்டு, பாத்திரவான்களாக கண்டுபிடிக்கப்பட்டபிறகு, அவர்கள் திரள்கூட்டத்தைக் கட்டமைப்பார்கள். அவர்கள், ஒருவரும் எண்ணமுடியாத முன்தீர்மானிக்கப்படாத எண்ணற்ற எண்ணிக்கையுடைய ஒரு கூட்டமாக இருப்பார்கள். இவர்கள் எந்த ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என்பது சித்திரமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மிகுந்த உபத்திரவத்தின் வழியாய் வந்து, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் துவைத்து வெண்மையாக்குவார்கள். அவர்கள் இறுதியில் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இல்லையெனில் கிறிஸ்துவோடு அவரது வேலையில் அவர்களுக்கு எந்த பங்கோ பாகமோ இருக்காது.

ஆனால் அவர்கள் தங்கள் பலியினாலான உடன்படிக்கையை தாமாக மனமுவந்து முழு ஆத்துமாவுடன் கைக்கொள்ளாததால், இந்த சோதனையானது அவர்கள்மீது ஒரு நியாயத்தீர்ப்பாக வரவேண்டிய அவசியம் இருந்தது. எனவே அவர்கள் கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளப்பட்ட சரீரமாக இருக்கமுடியாது. அவர்கள் சிங்காசனத்தையும், அழியாமையாகிய திவ்விய சுபாவத்தின் மகிமை நிறைந்த கிரீடத்தையும் இழப்பார்கள். ஆனாலும் அவர்கள் வெற்றியைக் குறிக்கும் குருத்தோலைகளைப் பெற்றுக்கொள்வார்கள். மேலும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை எனும் அவருடைய ஆலயத்திலும் மற்றும் அதன் மூலமாகவும் தேவனுக்கு ஊழியம் செய்ய அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்கிற நிச்சயத்தை நாம் அடைந்திருக்கிறோம்.

--------